**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**

**IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF**
**PREVENTION OF CORRUPTION ACT CASES, MADURAI**

**SPECIAL CASE NO:** 120/11 **P.W.** 1

**DEPOSITION OF WTITNESS** **FOR PRESECUTION**

**Name** : Tmt. K. Petchiammal
**Father's Name** : V. Kali
**Village** : Chennai
**Taluk** :
**Caste** :
**Calling** : -
**Religion** : Hindu.
**Age** : 52.

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day of 2013.**

மு.வி:

சத்தியமாகச் சொல்கிறேன். நான் தற்போது சென்னையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் இணைஇயக்குனராக பணியில் இருக்கிறேன். இந்த வழக்கு சம்பவ காலத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலரா 26.2.2009 முதல் 14.2.2011 முடிய பணியில் இருந்தேன்.
அப்போது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குனர் அலுவலகத்தில் இரு .7.9.2009 தேதியிட்ட கடிதம் ஒன்று திண்டுக்கல் மாவட்ட உணவு வழங்குதல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகத்தில் உதவியாளராக இருந்த சிவ சண்முகப் என்பவருக்கு எதிராகவும், அதே அலுவலகத்தில் சிறப்பு வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்த ஆர். நடராஜன் என்பவருக்கு எதிராக குற்றநடவடிக்கை தொடர இசைவாணை கேட்டு மேற்படி கடிதம் வந்தது. அந்த கடிதத்துடன் ..

K. Petchiammal
17.9.2013

[illegible]

[illegible] 26.2.2009 [illegible] 14.2.2011 [illegible]

[illegible] 7.9.2009 [illegible]

[illegible]

(1417)

திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல்நிலைய குற்ற எண் 3/2010ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல், சாட்சிகளின் வாக்குமூலங்களின் நகல்கள், எதிரிகளின் வாக்குமூலங்களின் நகல்கள், மகஜர்கள் மற்றும் இதர ஆவணங்கள் இணைத்து அனுப்பபட்டிருந்தன. நான் அந்த ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்தேன். அது மட்டுமின்றி திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் துணைக் கண்காணிப்பாளர், திரு.ஜெயகுமார் அவர்களை 8.11.2010ம் தேதி எனது அலுவலகத்திற்கு வரவழைத்து இந்த வழக்கு சம்பந்தமான இதர ஆவணங்களையும் நான் எனது பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டேன். மேற்படி துணைக்கண்காணிப்பாளர் இந்த வழக்கில் வழங்கப்பட்டிருந்த ரசாயன பரிசோதனை அறிக்கையின் முடிவையும் என்னிடம் ஆஜர் படுத்தினார். நான் அதையும் கவனத்துடன் படித்துப்பார்த்து, மேலும் தேவைப்பட்ட கூடுதல் விவரங்களையும் காவல் ~~ஆய்வாளரிடம்~~ துணைக்கண்காணிப்பாளரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். மேற்படி ஆவணங்களை நான் நன்றாக பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது வழக்குத்தொடர தகுந்த முகாந்திரம் இருப்பதாக முழுத்திருப்தி அடைந்தேன். எனவே நான் எதிரிகள் இருவர் மீதும் குற்றவழக்குத் தொடர 16. 11.2010ம் தேதியில் இசைவாணை வழங்கினேன். அந்த சமயத்தில் எதிரிகளை பணிநீக்கம் செய்யும் அதிகாரம் எனக்கு இருந்தது. ஊழல் தடுப்புச்சட்டம் பிரிவு 19 1(சி)ன் கீழ் இசைவாணை வழங்கும் அதிகாரம் எனக்கு உள்ளது. எதிரிகள் மீது ஊ.த.ச. பிரிவு 7 மற்றும் 13(2) உ/இ 13(1)(டி) 1988ன் கீழ் வழக்குத் தொடர இசைவாணை வழங்கினேன். அந்த இசைவாணை இது தான். அது அ.சா.ஆ.1. இது சம்பந்தமாக 14.12.2010ம் தேதி காவல்துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்.

கு.வி.

— — —

வழக்கறிஞர் கொடுத்த மனுவின் பேரில் குறுக்குவிசாரணை வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

K. Kumar 17.9.2013

சாட்சியால் திறந்த மன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

(signature) 17/9/13

சிறப்பு நீதிபதி

ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு சிறப்பு நீதி மன்றம்

மதுரை.

[illegible] 3/2010ம் [illegible] 8.11.2010 [illegible] 16.11.2010ம் [illegible] 19 1(அ) [illegible] 13(2) [illegible] 13(1)(அ) 1988ம் [illegible] 14.12.2010ம் [illegible]

ஒ.ப.

[illegible]

[illegible]

143

சிறப்பு வழக்கு எண் 120-2011 அ.சா.1 கே.பேச்சியம்மாள்
26.11.2013

அ.சா.1 மீண்டும் வரவழைக்கபட்டு பிரமாணத்தின் பேரில் கு.வி செய்யப்படுகிறார்.
கு.வி( எதிரிகள் தரப்பில்)

சத்தியமாகச்சொல்கிறேன். இந்த வழக்கில் சம்பவம் நடந்த தேதி 3.3.2010 என்றாலும், ஆனால் நான் இசைவாணை வழங்கிய தேதி 14.11.2010 என்றாலும் அதாவது சுமார் 8 மாதம் கழித்து இசைவாணை வழங்கியுள்ளேன் என்றாலும் சரிதான். அ.சா.ஆ.1 ஆன இசைவாணையில் எனது அலுவலக முத்திரையோ, பதிவி முத்திரையோ எதுவும் இடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.1ன் பார்வை காலத்தில் காவல்துறை தலைவர் (டிஜிபி), லஞ்ச ஒழிப்புத்துறை, சென்னை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன காவல்துறை தலைவரின் 7.9.2010ம் தேதியிட்ட அறிக்கை இசைவாணையில் ஒரு ஆவணமாக காட்டப்படவில்லை என்றால் சரிதான். அதற்கான அவசியமில்லை. மேற்படி காவல்துறை தலைவரின் அறிக்கை பெறப்பட்ட தேதி இசைவாணையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இசைவாணையில் நான் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை எந்த எந்த தேதியில் என்ன என்ன ஆவணங்களை பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டேன் என்ற விவரத்தை இசைவாணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். திண்டுக்கல் மாவட்ட ஊழல் தடுப்புத் துறை துணை கண்காணிப்பாளர் என்னை சந்தித்து வழக்கு ஆவணங்களை சமர்ப்பித்த விவரத்தை இசைவாணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இரண்டு ஆஜர் எதிரிகளையும் பணி இடைநீக்கம் நான் செய்யவில்லை என்றாலும் மாவட்ட ஆட்சியர் தான் செய்துள்ளார் என்றாலும் சரிதான். அதே போல் மேற்படி இருவருக்கும் பணி அமர்வு செய்ததும் மாவட்ட ஆட்சியர் தான் என்றால் சரிதான். எதிரிகள் இருவருக்கும் சம்பளம் பெற்றுத்தரும் அதிகாரி மாவட்ட வழங்கல் அதிகாரி என்றால் சரிதான். 2வது எதிரி அவ்வப்போது எழுதும் நாட்குறிப்புகளை மாவட்ட வழங்கல் அதிகாரியிடம் தான் சமர்ப்பிக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி இருவரின் பணிகளையும் மேற்பார்வை செய்யும் அதிகாரம் மாவட்ட வழங்கல் அதிகாரிக்கு தான் உள்ளது என்றால் சரிதான். வழக்கின் புகார்தாரர் மீது சிவில் சப்ளை சிஐடி போலீஸார் குற்ற எண் 5/2010 ஒரு வழக்குப் பதிவு செய்து அப்போது நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். நான் வழங்கிய இசைவாணையில் 2வது பாராவில் மேற்படி குற்ற எண் 5-2010 வழக்கு சம்பந்தப்பட்ட 6(ஏ) அறிக்கையை (பறிமுதல் அறிக்கை) போலீஸார் எனக்கு அனுப்பியதை இந்த முதலாவது எதிரி சிவசண்முகம் தான் எனக்காக கோப்பை பராமரித்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 6(ஏ) அறிக்கை அனுப்படுவதற்கு முன்னதாகவே அதாவது 1.2.2010ம் தேதியே கடத்தல் லாரியில் இருந்த அரிசி முழுவதும் பொது விநியோகத்திற்காக அனுப்பப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் தொடர்புடைய லாரி கே.ஏ.01 ஏஇ 6477 பிணையில் விடப்பட்டது என்றால் சரிதான். காவல் துறையினரால் பிடிக்கப்படும் கடத்தல் அரிசியை போலீஸார் மாவட்ட வழங்கல் அதிகாரியிடம் தான் வழங்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி அரிசி கடத்தல் வழக்கில்

K. Peechiammal
26.11.2013

சிறில் சப்ளை சிஐடி போலீஸார் குற்ற அறிக்கை தாக்கல் செய்து விட்டார்களா என்றால் அது எனது விசாரணையில் தெரியவரவில்லை. இது போன்ற அத்தியவசிய உணவுப்பொருட்கள் கடத்தல் வழக்குகள் அதற்கு என்று உள்ள உரிய நீதிமன்றத்தில் தான் நடத்தப்படும் என்றால் சரிதான். என்னுடைய இசைவாணையில் 3.3.2010ம் தேதி ஊழல் தடுப்புத் துறை அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்ட ரசாயன பரிசோதனை விளக்கம் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் பணியிடைநீக்கம் செய்யப்பட்ட விவரமும் இசைவாணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆவணங்களை பரிசீலித்ததில் இருந்து எந்த வகையில் நான் உளநிறைவு அடைந்தேன் என்பது குறித்து இசைவாணையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் வருவாய் துறை உயர் அதிகாரியாக இருந்தாலும் இந்த வழக்கில் இந்த எதிரிகள் மீது குற்ற நடவடிக்கை தொடர இசைவாணை வழங்கும் அதிகாரம் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் ஆவணங்களை முழுமையாக பரிசீலனை செய்யவில்லை என்றாலும் இயந்திரகதியில் இந்த இசைவாணையை வழங்கியுள்ளேன் என்றாலும் அது சரியல்ல.

<u>மறுவிசாரணை: இல்லை</u>

K. Periammal
26.11.2013

சாட்சியால் திறந்த மன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு, சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

26/11

சிறப்பு நீதிபதி
ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்பு சிறப்பு நீதி மன்றம்
மதுரை.

உதவி அமர்வு நீதிமன்றம்(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்), திண்டுக்கல்.

Spl.C. No.14 /2014

P.W. 2

பெயர் ஜெயராமன் — தொழில் வியாபாரம்

தகப்பனார்/~~கணவர்~~ பெயர் R. பழனிசாமி — மதம் இந்து.

கிராமம் திண்டுக்கல் — வயது 51

தாலுகா திண்டுக்கல் (E) — தேதி 01.04.2015

1873ம் வருடத்திய சட்டம் 10ன்படி சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

.................................................................................................................................................

நான் திண்டுக்கல் இந்திரா நகரில் குடி இருக்கிறேன். 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு சொந்தமாக 2 டிப்பர் லாரி உள்ளது. ஆஜர் எதிரிகளை தெரியும். 2002ம் ஆண்டு நான் உணவு திட்ட அரிசியை ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து எனது நண்பர் சேகர், ஜெயக்குமார், தனுஸ் ஆகியோரிகளிடம் கூட்டாக வாங்கி லோக்கலிலும் வெளியூர்களிலும் வாகனம் மூலம் அனுப்பி வியாபாரம் செய்வேன். அரசு திட்டத்தின்படி வேலை செய்யும் கூலி ஆட்களுக்கு பணமும் அரிசியும் கொடுக்கும். அதை ஒப்பந்தக்காரர்கள் மூலம் அரசு வழங்கும். ஒப்பந்தக்காரர்கள் கூலி ஆட்களுக்கு அரிசி கொடுப்பதற்கு பதிலாக எங்களிடம் பணத்தை வாங்கி கொள்வார்கள். இதனால் உணவு விநியோக அலுவலர்கள் என் மீது அரிசி கடத்தியதாக வழக்குகள் போட்டுள்ளார்கள். என் நண்பர்கள் மீதும் வழக்கு போட்டிருந்தார்கள். அதனால் நாங்கள் அந்த வியாபாரத்தை நிறுத்தி விட்டோம். 3.1.10ம் தேதி ஒட்டன்சத்திரத்தில் உணவு கடத்தல் தடுப்பு கண்காணிப்பு அலுவலர்கள் வாகன சோதனை செய்துள்ளார்கள். கே எ 01 ஏ இ 6477 அரசு லாரியை சோதனை செய்த போது 254 மூடை ரேசன் அரிசியை பிடித்து அந்த லாரி ஓட்டுநர் ஆனந்தன் என்பவரை கைது செய்து உள்ளார்கள். அந்த ஆனந்தன் யார் என்று தெரியாது. அந்த வழக்கில் என்னையும் என் நண்பர்களையும் சேர்த்து 7 பேர்கள் மீது வழக்கு போட்டுள்ளார்கள். இதை விசாரிக்க சென்றால் கைது செய்து விடுவார்கள் என்று பயந்து தலைமறைவாகி விட்டோம். 29.1.2010 அன்று திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் நானும் என்து நண்பர்களும் முன் ஜாமீன் பெற்று விட்டோம். அந்த பிணை உத்தரவின்படி நாங்கள் தினமும் காலை 10 மணிக்கு திண்டுக்கல் ஜெ.எம்.3 நீதிமன்றத்தில் ஆஜராகி கையெழுத்திட வேண்டும். அதன்படி நாங்களும் கையெழுத்திட்டு வந்தோம். அப்போது எனக்கு அறிமுகமான 2ம் எதிரி 25.2.10 மாலை 6 மணிக்கு திண்டுக்கல் ரயில்வே ஸ்டேசன் முன்பு நான் நின்று கொண்டிருந்த போது என்னை சந்தித்து "புட்செல்லில்" வழக்கு போட்டுள்ளார்கள். எதிரி வருவாய் ஆய்வாளராக வேலை செய்து வருவதால் அவர்கள் அலுவலகத்தில் இருந்து தான் பிரிவு 6(எ)ன்படியான அறிக்கை அனுப்ப வேண்டும். அதை பி.ஆர்.ஓ அலுவலகத்திற்கு அனுப்பி உள்ளதாகவும், உயர்நீதிமன்ற

P. [signature] 01/04/15

உத்தரவுப்படி லாரி உரிமையாளர் கணேசன் லாரியை திரும்ப பெற்றுக் கொண்டுள்ளதாகவும், உங்களை அந்த வழக்கில் இருந்து விடுவிக்க ஏற்பாடு செய்து தருகிறேன் என்றும் மாவட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்தில் வேலை செய்யும் சிவா என்பவர் மூலம் அதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாக கூறினார். ரூ.10,000/- சிவா என்ற சிவசண்முகத்திற்கும் ரூ.5000/- ம் நடராஜனுக்கும் வேண்டும் என்றும் கேட்டார். நான் மேற்படி தொகை அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணமா என்று கேட்ட போது அதை லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதைக் கொடுத்தால் வழக்கில் இருந்து விடுவிப்பதாக சொன்னார். பணம் கொடுத்தால் மாவட்ட வருவாய் ஆய்வாளர் அவருக்கு அறிக்கை அனுப்புவதாக சொன்னார். நான் என் நண்பர்களை கலந்து சொல்வதாக கூறி விட்டேன். 2.3.10ம் தேதி நானும் ஜெயகுமாரும், சேகர், தனுஸ் ஆகியோர் நீதிமன்றத்தில் கையொப்பம் செய்து விட்டு நீதிமன்றத்திற்கு எதிரே உள்ள டீக்கடையில் சுமார் 11 மணி அளவில் நின்று கொண்டிருந்த போது நடராஜன் வந்தார். அங்கு எங்களை சந்தித்து நான் மாவட்ட வழங்கல் அலுவலகத்தில் இருக்கும் சிவா என்பவருடன் பேசி விட்டேன். சிவா என்பவர் அலுவலகம் வந்து பார்க்கும்படி கூறினார் என்றார். என் நண்பர்களிடம் கேட்டேன். அவர்கள் அதில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. அதனால் 12.45 மணிக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட வழங்கல் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு சிவாவையும், நடராஜனையும் பார்த்தேன். அங்கு 1ம் எதிரியான ஆஜர் எதிரி சிவா இருந்தார். அவரை நடராஜன் அடையாளம் காட்டினார். அப்போது நான் கேட்ட போது எங்களுக்கு முன்பாகவே நடராஜன் சிவாவிடம் வழக்கு சம்பந்தமாக பேசி உள்ளார். அப்போது சிவா 6 (எ) ரிப்போர்ட் தயாராகி விட்டது. உங்களுக்கு சாதகமாக செய்து தருகிறேன். லாரியை கணேசன் மூலம் வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் கணேசனை யார் என்று தெரியாது என்று சொன்னேன். அதற்கு உங்களுக்கு சாதகமாக செய்து தருகிறேன். அதற்கு எனக்கு ரூ.10000/-மும் சிவாவிற்கு ரூ.5000/-மும் லஞ்சமாக தர வேண்டும் என்றார். அந்த பணத்தை மறுநாள் 3.3.10 அன்று கரூர் புறவழிச்சாலை கலெக்டர் அலுவலகம் அருகில் உள்ள அம்சவள்ளி ஓட்டல் வந்து பணத்தை கொடுக்க வேண்டும் என்றார். நடராஜன் மறுநாள் பணத்துடன் வர வேண்டும் என்று சொன்னார். நான் மனதுக்கு கஷ்டமாக இருந்தது. சரி என்று கூறி விட்டேன். நான் மறுநாள் காலை நீதிமன்றத்தில் கையெழுத்து செய்து விட்டு கம்ப்யூட்டர் சென்டரில் நானாக ஒரு புகார் தயாரித்து லஞ்ச ஒழிப்பு அலுவலகம் சென்று சுந்தரராஜன் ஆய்வாளரிடம் கொடுத்தேன். அதை ஆய்வாளர் பெற்றுக் கொண்டு 11.45 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நகல் கொடுத்தார். என்னிடம் கையொப்பமும் பெற்றுக் கொண்டார். நான் கொடுத்த புகார் மனு இது தான். அது அதசாஆ.2. ஆகும். அச்சிட்ட முதல் தகவல் அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த கையொப்பம் அதசாஆ.3 ஆகும்.

என்னை ஆய்வாளர் அங்கு காத்திருக்கும்படி கூறினார். மதியம் 2.15 மணிக்கு செழியன், மற்றும் முத்துச்சாமி ஆகிய இருவர் அங்கு வந்தனர். ஆய்வாளர் செழியன் மற்றும் முத்துச்சாமியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.என்னை அவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். திண்டுக்கல் கதர் கிராம தொழில் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக வேலை பார்க்கும் செழியன் என்றும் திண்டுக்கல் மீன்வளத்துறையில் உதவியாளராக வேலை பார்க்கும் முத்துச்சாமி என்றும் தெரிந்து கொண்டேன். முதல் தகவல் அறிக்கையை சாட்சிகள் இருவரிடமும் கொடுத்து படிக்க சொன்னார்கள். அவர்களும் படித்து பார்த்து விட்டு என்னிடம் விளக்கம் கேட்டார்கள். நானும் விளக்கம் சொன்னேன். ஆய்வாளர் என்னிடம் பணம் கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டார். நானும் கொண்டு வந்துள்ளேன் என்று சொன்னேன். லஞ்ச பணம் ரூ.15000/-த்தை ஆய்வாளர் டேபிளில் வைத்தேன். நான் ஆயிரம் ரூபாய் பத்து தாளும் ஐநூறு ரூபாய் பத்து தாளும் வைத்தேன். 1ம் எதிரிக்காக ஆயிரம் ரூபாய் நோட்டுக்களாக பத்து தாள்களும் 2ம் எதிரிக்காக ஐநூறு ரூபாய் பத்து தாளும் கொடுத்தேன். அந்த பணத்தை ஆய்வாளர் முன்னிலையில் முத்துச்சாமி எண்ணினார். ஆய்வாளர் நோட்டுக்களில் உள்ள எண்களை மகஜரில் எழுதிக் கொண்டார். தலைமை காவலர் பாலசுப்பிரமணி என்பவரை வரவழைத்து ஒரு கண்ணாடி டம்பளரில் 3/4 டம்பளர் அளவிற்கு சோடியம் கார்பனேட் கரைசல் தயாரித்தார். அதை ஆய்வாளர் டேபிளில் வைத்தார். முத்துச்சாமியிடம் பணத்தை எண்ணிய பின்னர் அவரது வலது கையை கரைசலில் நனைக்கும்படி கூறினார். அவ்வாறு நனைக்கும் போது கரைசலில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. பின்னர் இடது கையையும் நனைத்தார். அப்போதும் மாற்றம் ஏற்படவில்லை. முத்துச்சாமி கைகளை துணியில் துடைத்துக் கொண்டார். பாலசுப்பிரமணி என்ற தலைமை காவலர் மூலம் 1000 மற்றும் 500 ரூபாய் நோட்டுக்களில் பினாப்தலின் பவுடரை தடவினார். அந்த நோட்டுக்களை முத்துச்சாமியிடம் கொடுத்து மீண்டும் எண்ணும்படி சொன்னார். நோட்டுக்களை டேபிளில் வைக்கும்படி சொல்லி விட்டு முத்துச்சாமியை சோடியம் கார்பனேட் கரைசலில் கையை நனைக்கும்படி சொன்னார். அவர் தன் இரண்டு கைகளையும் நனைத்தார். அவர் நனைத்த உடன் அவர் கையில் நிற மாற்றம் ஏற்பட்டது. அந்த தண்ணீரிலும் நிற மாற்றம் ஏற்பட்டது. இரண்டு கைகளையும் நனைத்த கரைசல் ஒரு டம்பளரில் தான் நனைத்தார். கரைசலை கொட்டி அழித்தார்கள். பினாப்தலின் பவுடர் தடவி கரைசலில் நனைத்து இருந்தால் கலர் மாறும் என்று விளக்கினார். எதற்காக அந்த செய்முறை விளக்கம் என்று என்னிடம் சொன்னார். 1000 ரூபாய் நோட்டுக்களை முத்துச்சாமி எனது மேல்பாக்கெட்டில் வைத்தார். அது 10 தாள்களாகும். அது சிவா என்ற சிவசுப்பிரமணியத்துக்கு லஞ்சம் கொடுப்பதற்காக வைத்த பணமாகும். பினாப்தலின் பவுடர் தடவிய 10 ஐநூறு ரூபாய் நோட்டுக்களை முத்துச்சாமி என்னுடைய வலது பேண்ட் பாக்கெட்டில் வைத்தார். என்னுடைய

P. [signature] 01/04/15

சட்டையின் மேல் பாக்கெட்டிலும் ,பேண்டின் வலது பாக்கெட்டிலும் பணம் தவிர வேறு எதுவும் இல்லை . அந்த பணத்தை சிவ சுப்பிரமணியம் மற்றும் நடராஜன் கேட்கும் போது கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அவ்வாறு பணம் கொடுத்ததை பெற்றுக் கொண்டால் வெளியே வந்து தலைமுடியை இரண்டு கைகளால் கோதும்படி கூறினார். என்னுடன் செழியன் என்பவரையும் செல்லும்படி கூறினார். அவரை எதிரிகள் கேட்டால் எனது உறவினர் என்று கூறும்படி சொன்னார். என்னிடம் கூறிய அறிவுரைகளை செழியனிடமும் கூறினார். அவரை என்னுடன் செல்லும்படி கூறினார். பணம் கொடுக்கும் போது உடன் இருங்கள் என்று சொன்னார். அதற்கு ஒரு ஆவணம் எழுதி கொண்டார்கள். அதற்கு பெயர் மகஜராகும். 2.45 மணி முதல் 3.45 மணி வரை ஆவணம் தயாரித்தார்கள். என்னிடமும், முத்துச்சாமியிடமும், செழியனிடமும் கையொப்பம் வாங்கினார்கள். அந்த மகஜர் இது தான். அது அதசாஆ.4 ஆகும்.3.3.10 அன்று 3.45 மணிக்கு ஆய்வாளர் மற்றும் அவரது குழுவினருடன் நானும் செழியனும் முத்துச்சாமியும் புறப்பட்டு சென்று கரூர் ரோட்டில் உள்ள அம்சவள்ளி ஓட்டலுக்கு 500 மீட்டர் முன்னாலேயே வண்டியை நிறுத்தி விட்டு அறிவுரைகளை மீண்டும் நினைவு படுத்தி விட்டு என்னையும் செழியனையும் மட்டும் அனுப்பி வைத்தார். நானும் செழியனும் ஓட்டலுக்குள் சென்றோம். அங்கு நடராஜனும் சிவசுப்பிரமணியனும் இல்லை .சுமார் 4.10 மணி வரை காத்திருந்து விட்டு வெளியே வந்தேன். நடராஜனை என் செல்போனில் தொடர்பு கொண்டேன். விஷ்ணு டீக்கடைக்கு செல்லுங்கள் சிறிது நேரத்தில் நான் அங்கு வந்து விடுகிறேன் என்று சொன்னார். நானும் செழியனும் ஆய்வாளரிடம் அந்த விவரத்தை தெரிவித்து விட்டு விஷ்ணு டீக்கடைக்கு சென்றோம். சுமார் 4.20 மணிக்கு விஷ்ணு டீக்கடைக்கு சென்றேன். எதிரிகள் இருவரும் 4.30 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள். டீக்கடைக்கு அருகில் ஒரு கூரை செட் உள்ளது. அங்கு சென்று தெற்கு பார்த்த சேரில் இருவரும் உட்கார்ந்தார்கள். உங்களுக்கு ரிப்போர்ட் தயாராகி விட்டது. நான் கிளியர் செய்து விடுகிறேன். பணத்தை கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். நான் ரூ .10,000/-த்தை சட்டை பாக்கெட்டில் இருந்து எடுத்து சிவசுப்பிரமணியத்திடம் கொடுத்தேன். என்னுடைய அமௌண்ட் எங்கே என்று நடராஜன் கேட்டார். நான் என்னுடைய வலது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ரூ .5000/-த்தை எடுத்து நடராஜனிடம் கொடுத்தேன். நான் கொடுத்த பணத்தை அவர்கள் இருவரும் எண்ணி பார்த்து விட்டு அவரவர்கள் சட்டை இடது மேல் பையில் வைத்துக் கொண்டார்கள். அவர்கள் டீக்கு ஆர்டர் கொடுத்து விட்டு நான் கிளியர் செய்து விடுகிறேன். நீங்கள் போயிட்டு வாங்க என்று சொன்னார்கள். நான் வெளியே வந்து நான் இரண்டு கைகளாலும் தலைமுடியை கோதி சிக்னல் செய்தேன். ஆய்வாளர் முத்துச்சாமியுடன் மற்றும் போலீசார் அங்கு வந்தார்கள். என்னிடம் நடந்ததை கேட்டார்கள்.நான் சொன்னேன். பின்னர் எதிரிகள் இருவரையும் ஆய்வாளருக்கு அடையாளம் காட்டினேன். பச்சை

P. [signature] 01/04/15

கலர் பேண்டும் வெள்ளை முழுக்கை சட்டையில் பச்சை கோடுகள் போட்ட சட்டையை சிவசுப்பிரமணியம் அணிந்து இருந்தார். நடராஜன் வெள்ளை கலர் அரைக்கை சட்டையில் ரோஸ் கலர் கோடு இருந்த சட்டை அணிந்து இருந்தார். அவரும் பச்சை கலர் பேண்ட் அணிந்து இருந்தார். என்னை ஆய்வாளர் சற்று தள்ளி இருக்கும்படி கூறினார். இரவு 8 மணிக்கு மறுநாள் காலை லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு வரும்படி கூறி விட்டார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். அந்தப் பணம் சா.பொ.1 ,2 வரிசையாகும். சிவாவிடம் கொடுத்த ஆயிரம் ரூபாய் 10 நோட்டுக்கள் கொண்ட பணம் வரிசை சாபொ 1 ஆகும். நடராஜனிடம் கொடுத்த ஐநூறு ரூபாய். 10 நோட்டுக்கள் கொண்ட பணம் வரிசை சாபொ.2 ஆகும்.

குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation, in the presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused any, admitted by the witness to be correct.

P. Sam
01/04/15

Chief Judicial Magistrate
Dindigul
1/4/15

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

Spl.C. C NO. 14 /2014

அசா : 2

பெயர்:பி. ஜெயராமன்
தொழில் வியாபாரம்

தகப்பனார் பெயர் : பி. பழனிச்சாமி
மதம்: இந்து

கிராமம்: திண்டுக்கல்
வயது : 51

தாலுகா: திண்டுக்கல் (கி)
தேதி: 10.03.2016

1873ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10ன் படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

குறுக்கு விசாரணை:

திண்டுக்கல் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குள் தான் நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு இரு சக்கர வாகனத்தில் செல்ல சுமார் 10 நிமிடம் ஆகும் . அதசாஆ.2 புகாரிலும், லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையிலும் நான் லாரி வைத்து வாடகைக்கு ஓட்டி தொழில் செய்வதாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் டிப்பர் லாரி வைத்திருந்ததாகவும் லாரி வைத்து என்ன தொழில் செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லைஎ ன்றால் சரிதான். அதசாஆ.2 புகாரிலும், லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையிலும் என்ன வகையான லாரி வைத்திருந்தேன் என்றும், எந்த பதிவெண் உள்ள லாரி வைத்திருந்தேன் என்றும் எந்த முகவரியில் வைத்து அந்த லாரியை இயக்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என் மீதும், என் நண்பர்கள் சேகர், தனுஷ், ஜெயக்குமார் மீதும் உணவு கடத்தல் தடுப்பு கண்காணிப்பு போலீசார் பல வழக்குகள் போட்டுள்ளனர் என்றால் சரிதான். ரேசன் அரிசி சட்ட விரோதமாக கடத்தி விற்றதற்காக தான் என் மீது வழக்கு என்றால் சரிதான். ரேசன் அரிசி வாங்குவதும் விற்பதும் சட்ட விரோதம் என்று எனக்கு தெரியும். உணவு கடத்தல் தடுப்பு போலீசார் எனக்கு எதிராக வழக்கு போட்டால் அதிலிருந்து தப்பிக்க முன் ஜாமீன் எடுக்கலாம் என்ற விவரம் தெரியும். கைது செய்தால் அந்த வழக்கில் இருந்து ஜாமீனில் வெளியில் வரலாம் என்ற விவரமும் எனக்கு தெரியும். எனக்கு எதிராக உள்ள உணவு கடத்தல் தடுப்பு வழக்கில் வழக்கறிஞர் பத்மநாபன் ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான். எந்த காலத்திலும் ரேசன் அரிசி கடத்தியதாக எனக்கு சொந்தமான லாரி எப்போதும் போலீசாரால் கைப்பற்றவோ பிடிபடவோ இல்லை என்றால் சரிதான். உணவு தடுப்பு போலீசார் அரிசி கடத்தல் சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதும் மற்றும் குற்றப்பத்திரிக்கையை அந்தந்த வழக்குகளில் தாக்கல் செய்வதும் சம்பந்தப்பட்ட குற்றவியல் நடுவர் மன்றத்தில் என்ற விவரம்

10

15.3.16

தெரியும். அது போல் தாக்கல் செய்யப்படும் வழக்குகளில் விசாரணை நடைபெற்று தீர்ப்புகள் அந்தந்த நீதிமன்றங்களில் தான் வழங்கப்படும் என்றால் சரிதான். உணவு கடத்தல் தடுப்பு போலீசார் போலவே மாவட்ட வழங்கல் அதிகாரி அலுவலகத்தில் உணவு கடத்தல் தடுப்பிற்காக பறக்கும் படை பிரிவு ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கும் விவரம் எனக்கு தெரியும். மாவட்ட வழங்கல் அதிகாரியும், அதன் தொடர்புடைய பறக்கும்படை பினரும் அரிசி கடத்தல சம்பந்தம்ாக அவ்வப்போது கடத்தலுக்கு பயன்படுத்தும் வாகனங்களையும் தொடர்புடைய ஆட்களையும் பிடித்து அந்தந்த அதிகாரிகள் உணவு கடத்தல தடுப்பு போலீசாரிடம் ஒப்படைக்கப்படுவார்களா என்றால் அதைப் பற்றிய விவரம் எனக்கு தெரியாது. மாவட்ட வழங்கல் அதிகாரிக்கும் அநத அலுலலகத்தில் உள்ள அலுவலர்களுக்கும் உணவு கடத்தல் தடுப்பு சம்பந்தமாக என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற விவரம் எனக்கு தெரியாது. என் மீதும் என் நண்பர்கள் சேகர்,தனுஷ்,ஜெயக்குமார் மீதும் மாவட்ட வழங்கல் அலுவலகத்தில் இருக்கும் பறக்கும் படையினரால் வழக்கு போடப்பட்ட உணவு கடத்தல் தடுப்பு போலீசாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. நான் எந்த காலத்திலும் திண்டுக்கல் மாவடட வருவாய் அலுவலகத்திலோ, மாவட்ட வழங்கல்அலுவலகததிலோ தாலுகா வட்ட வழங்கல் அலுவலகத்திலோ உள்ள அலுவலர்களை அணுகி எந்த சலுகையும் நான் பெற்றதில்லை. எனக்கு KA01 AE 6477 என்ற லாரியானது யாருக்கு சொந்தமானது என்பதும் அந்த லாரி எங்கிருந்து எந்த இடத்திற்கு எதற்காக இயக்கப்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது. அந்த லாரியின் ஓட்டுநர் பெயர் பற்றிய விவரமும் எனக்கு தெரியாது.அந்த லாரி மற்றும் அது தொடர்புடைய அரிசி கடத்தல் சம்பந்தமாக எனக்கும் என் நண்பர்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். 3.1.10ம் தேதி உணவு கடத்தல் தடுப்பு போலீசார் அந்த லாரியை பிடித்து அரிசியும் ஓட்டுநரையும் அந்த போலீசார் பிடித்த விவரம் 4.1.10ம் தேதி எனக்கு தெரிய வந்தது. KA01 AE 6477 என்ற லாரியானது உணவு தடுப்பு போலிசார் தாக்கல் செயத 5/10 வழக்கில் ரேசன் அரிசயை கடத்தியதற்கு புரோக்கர்களாக நானும் என் நண்பர்களும் செயல்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த குற்ற எண்.5/ 10 வழக்கில் மதுரையில் உள்ள உயர்நீதிமன்ற கிளையில் மனு செய்து அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். KA01 AE 6477 என்ற லாரியில் சிவில் சப்ளை போலிசார் கைப்பற்றி அதில் இருந்த 254 மூட்டை ரேசன் அரிசியையும் அரசுடைமையாக்கி அவற்றை

15/3/16

பொதுமக்கள் விநியோகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும். அந்த லாரியை ஓட்டிய ஓட்டுநர் ஆனந்தன், மற்றும் லாரிஉரிமையாளர் கணேசன் ஆகியோருக்கு ஜாமீனும்முன் ஜாமீனும் கிடைத்து விட்டது என்ற காரணத்தையும் அதே போல் அரிசி முழுவதையும் கைப்பற்றப்பட்டது என்ற காரணத்தையும் குறிப்பிட்டு நாங்கள் திண்டுக்கல் முதன்மை மாவட்ட செசன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து முன் ஜாமீன் பெற்றோம் என்றால் சரிதான். அந்த லாரிக்கும் அரிசிக்கும் எனக்கும் என் நண்பர்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று குறிப்பிட்டு தான் உயர்நீதிமன்றத்திலும மாவட்ட நீதிமன்றத்திலும் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். இந்த லாரியை தவிர குற்ற எண்.5 /10 உணவு கடத்தல் தடுப்பு போலீசார் குட்டியானை மினி லாரியை டிஎன் 57 கே 7267 ஜெயக்குமாருக்கு சொந்தமான வாகனத்தை அந்த வழக்கில் போட்டிருந்த விவரம் எனக்கு தெரியும். சம்பவ காலத்திலும் தற்போதும் நான் திண்டுக்கல் இந்திரா நகரில் தான் குடி இருந்து வருகிறேன்.சம்பவ காலத்திலும் தற்போதும் 2ம் எதிரி நடராஜன் திண்டுக்கல் கக்கன் தெருவில் குடி இருந்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும். 2ம் எதிரி வீட்டிற்கும் என் வீட்டிற்கும் 200 அடி து ரம் இருக்கும் என்றால் சரிதான். 2.3.10க்கு முன்பாக 1ம் எதிரி சிவசண்முகம் யார் என்றோ அவர் பதவி என்ன என்றோ எனக்கு தெரியாது. முதல் எதிரிக்கு அரசு பணியில் என்னென்ன அதிகாரங்கள் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அதே போல் 2ம் எதிரிக்கு அரசு பணியில் என்னென்ன அதிகாரங்கள் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. உணவு கடத்தல் போலீசார் எங்களுக்கு எதிராக தாக்கல் செய்த 5/10 வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டி நானோ எனது நண்பர்களோ அந்த பிரிவு போலீசாரை எப்போதும் அணுகி சலுகைகளையோ, உதவிகளையோ கேட்கவில்லை என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு ஜெ.எம். 3 நீதிமன்றத்தில் சிசி எண். 319/2010 வழக்காக தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும் இதில் சிவில் சப்ளை போலீசார் எனக்கு உதவி பண்ண முடியாத விவரம் எனக்கு தெரியும்.லஞ்சம் கொடுப்பதும் குற்றம் வாங்குவதும் குற்றம் என்ற விவரம் எனக்கு தெரியும்.இந்த நிகழ்ச்சிக்கு முன்பாக நான் எந்த அதிகாரியையும் அணுகி புகாரும் கொடுக்கவில்லை. இந்த நிகழ்ச்சிக்கு முன்பாக நான் திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கோ வேறு ஊரில் உள்ள லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கோ நான் செல்லவில்லை. லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் கொடுக்கும் விதம், அந்த அதிகாரிகள் கடைபிடிக்கும் நடவடிக்கைகள் அதன் பின்னர் அந்த அதிகாரிகளின்

P. [signature] 15/3/16

நடவடிக்கைகள் எனக்கு தெரியாது. இந்த நிகழ்வுக்கு முன்பாக வேறு காவல் நிலையத்திலும் நான் புகார்தாரராக வரவில்லை என்றால் சரிதான். உணவு கடத்தல் தடுப்பு போலீசார் குற்ற எண். 5/ 10 வழக்கு போட்டு நீதிமன்றம் மூலமாக எனக்கு முன் ஜாமீன் கிடைத்த பிறகு அந்த உணவு கடத்தல் தடுப்பு காவல் நிலையத்திற்கு நான் செல்லவில்லை. சம்பவ கால கட்டத்தில் நானும் சேகர், தனுஷ். ஜெயக்குமார் நால்வரும்சேர்ந்து தான் கூட்டாக தொழில் செயதோம் என்றால் சரிதான். எங்கள் நால்வருக்காகவும் தான் எதிரிகள் என்னிடம் பணம் கேட்டார்கள். எதிரிகள் பணம் கேட்டது சம்பந்தமாக என் நண்பர்கள் பணம் கொடுக்க தயாராக இல்லை என்ற விவரத்தை நான் தெரிந்து கொண்டேன். உணவு கடத்தல் தடுப்பு போலீசார் போட்ட 5/ 10 வழக்கிற்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும்இல்லை என்பதால் தான் எதிரிகள் பணம் கேட்டதற்கு நாங்கள் விருப்பம் இல்லாமல் இருந்தோம் என்றால் சரிதான். நானோ எனது நண்பர்களோ 5/10 வழக்கு சம்பந்தமாக குற்றத்தை ஒப்புக் கொள்வதாக எந்த கால கட்டத்திலும் முடிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த தவறும் செய்யவில்லை, என்றும், எந்த காலத்திலும் அரிசி கடத்தல் செய்யவில்லை என்றும் பொய் வழக்கை தான் உணவு கடத்தல் தடுப்பு போலீசார் போட்டுள்ளனர் என்றும் அதனால் அந்த வழக்கை சந்திக்கலாம் என்று தெரிந்தது. 25.2.2010 ம் தேதி 2 ம் எதிரி பணம் கேட்ட உடனே அது சட்டப்படி தவறு என்று எனக்கு தெரிந்தது.25.2.10 ம் தேதி 2 ம் எதிரி பணம் கேட்ட உடனேயே லஞ்ச ஒழிப்பு போலீசாரிடமோ, மாவட்ட ஆட்சி தலைவரிடமோ, மாவட்ட வழங்கல் அலுவலரிடமோ நான் புகார் கொடுக்கவில்லை. 2.3.10 ம் தேதி 1 ம் எதிரி என்னை முதன்முதலில் பார்த்த உடனே பணம் கேட்டார். 2.3.10 ம் தேதி 1,2 எதிரிகள் பணம் கேட்ட உடனேயே லஞ்ச ஒழிப்பு போலீசில் நான் புகார் கொடுக்கவில்லை. திண்டுக்கல் அம்சவள்ளி ஓட்டல் பைபாஸ் ரோட்டில் இருந்து சுமார் 200 அடி துாரத்தில் கிழக்கு பக்கமாக அமைந்துள்ளது என்றால் சரிதான். அங்கு பகல் நேரத்தில் ஆட்கள் நடமாட்டம் எப்போதும் அதிகமாக இருக்கும் என்றால் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் வாகனம் அதிகமாக இருக்காது. அந்த இடத்திற்கு நேர் எதிரே கன்னியாகுமரி பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை செல்கிறது என்றால் சரிதான். பல வெளியூர்களுக்கு செல்லக்கூடிய பைபாஸ் சாலை சந்திக்கிறது என்றால் சரிதான். அம்சவள்ளி ஓட்டலில் இருந்து சுமார் 500 அடி துாரத்தில் விஷ்ணு டீக்கடை உள்ளது ,அங்கு ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். நான் கொடுத்த இந்த அதசா.ஆ.2 . புகாரை தவிர திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால்

P. S... 15/5/16

சரிதான். அதசாஆ.2 கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் என்றால் சரிதான்.இந்த புகார் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரத்தை லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் நான் சொல்லவில்லை. அதசாஆ.2 எந்த அலுவலகத்தில் தட்டச்சு செய்யப்பட்டது என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரிதான்.அதசாஆ.2 புகாரில் 2.1.10ம் தேதி தான் எனக்கு சம்பந்தம் இல்லாத லாரியைதிண்டுக்கல் சிவில் சப்ளை போலீசார் பிடித்ததாக சொல்லிஉள்ளேன் என்றும். 3.1.10ல் பிடித்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதசாஅ 2 புகாரில் எந்த பதிவெண் கொண்ட லாரியை சிவில் சப்ளை போலீசார் பிடித்தார்கள் என்பதையோ எத்தனை அரிசி மூடைகளை கைப்பற்றினார்கள் என்பதையோ அந்த லாரியின் ஓட்டுநர் மற்றும் உரிமையாளர் பெயர் அந்த புகாரில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதசாஆ.2 புகாரில் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்கு கூலியாக வழங்கப்படும் அரிசியினை அதற்குண்டான பணத்தை தொழிலாளர்களுக்கு கொடுத்து விட்டு அரிசியினை பெற்று வியாபாரம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.அதசாஆ.2 புகாரில் அரசு ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கும் அரிசிக்கு பதிலாக ஒப்பந்தகாரர்களுக்கு பணத்தை கொடுத்து நாங்கள் அரிசி பெறுவதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.அதசாஆ.2 புகாரில் பறக்கும் படை பிரிவில் உள்ள திண்டுக்கல் மாவட்ட குடிமை பொருள் வழங்கல் பிரிவு பறக்கும் படை நடராஜன் எனக்கு ஏற்கனவே அறிமுகமானவர் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. அதசாஆ.2 புகாரில் முதல் எதிரி பெயர் சிவா என்று தான் குறிப்பிட்டுள்ளேன் எந்த இடத்திலும் சிவசண்முகம் என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அதசாஆ.2 புகாரில் 2.3.10ம் தேதி மதியம் 2.45 மணிக்கு நான் சிவில் சப்ளை அலுவலகத்திற்கு சென்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரிதான்.அதசாஆ.2 புகாரில் 2ம் எதிரி தான் ஆர்.ஐ ஆக வேலை பார்ப்பதாகவும் அவர் அலுவலகத்தில் இருந்து தான் 6 (A) ன்பி அறிக்கை அனுப்ப வேண்டும் என்று அதில் இல்லை என்றால் சரிதான். அதசாஅ.2 புகாரில் தங்கள் அலுவலகத்தில் இருந்து DRO அலுவலகத்திற்கு அனுப்பி உள்ளதாகவும். உயர்நீதிமன்ற உத்தரவுப்படி லாரி உரிமையாளர் கணேசன் லாரியை திரும்ப பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அதில் கூறவில்லை என்றால் சரிதான்.அதே போல் புகாரில் 2ம் எதிரி நடராஜன் நான் மேற்படி தொகை அரசு க்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டதற்கு அவர் லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.அதசாஆ 2 புகாரில் 2ம் எதிரி நடராஜன் என்னிடம் பணம் கொடுத்தால் மாவட்ட வருவாய்

P. [signature] 15/3/16

அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்புவதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.அதசாஆ.2 ல் நான் என் நண்பர்களிடம் இது பற்றி கேட்ட போது அதில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகாரிலும் லஞ்ச ஒழிப்பு போலீசாரிடமும் 1ம் எதிரியை 2ம் எதிரி அடையாளம் காட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.அதசாஆ.2 புகாரில் 2.3.10ம் தேதி நான் சிவாவை சந்தித்த போது அவர் 6 (A) ரிப்போர்ட் தயாராகி விட்டது என்றும், எனக்கு சாதகமாக செய்து தருவதாக சொன்னதாகவும், லாரியை கணேசன் மூலமாக வாங்கி கொள்ளுமாறு சொன்னதாகவும், அதற்கு நான் கணேசனை யார் என்று தெரியாது என சொன்னதாகவும், 1ம் எதிரி எனக்கு சாதகமாக செய்து தருவதாக சொன்னதாகவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.புகாரிலும் லஞ்ச ஒழிப்பு போலீசாரிடமும் அம்சவள்ளி ஓட்டலுக்கு வந்து பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை , ஓட்டலுக்கு அருகே வந்த பணம் கொடுக்குமாறு சொன்னார். லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரித்த போது நான் 2ம் எதிரியை 25.2.2010ம் தேதி பார்த்த போது தான் தம்முடைய அலுவலகத்தில் இருந்து தான் பிரிவு 6 (A)அறிக்கையை அனுப்ப வேண்டும் என்றும் அதை DRO அலுவலகத்திற்கு அனுப்பி விட்டதாகவும், உயர்நீதிமன்ற உத்தரவுப்படி லாரி உரிமையாளர் கணேசன் திரும்ப பெற்றுக் கொண்டு விட்டதாகவும் என்னை அந்த வழக்கில் இருந்து விடுவித்து தருகிறேன் என 2ம் எதிரி சொன்னதாக கூறி இருக்கிறேனா என்றால் சொல்லி உள்ளேன். திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு போலீசார் அலுவலகத்தில் 3.3.10ம் தேதி மதியம் 2.15 மணிக்கு தயாரித்த அதசாஆ.4 மகஜர் தவிர வேறு மகஜர் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் எதிரிகள் இருவரும் விஷ்ணு டீக்கடைக்கு தனித்தனியாக இரு சக்கர வாகனத்தில் வந்ததாக சொல்லவில்லை. எனது செல் எண்ணையோ, எதிரிகளின் செல் எண்ணையோ புகாரிலோ போலீஸ் விசாரணையிலோ நான் சொல்லவில்லை. 2ம் எதிரி நடராஜனை 3.3.10ம் தேதி மாலையில் எந்த எண்ணுடைய செல்போனில் இருந்து எந்த எண்ணுடைய செல்போனுக்கு தொடர்பு கொண்டேன் என்று லஞ்ச ஒழிப்பு போலீசார் என்னை விசாரித்த போது சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த போது இரு அரசு சாட்சிகளும் FIRஐ படித்து பார்த்த பின்பு என்னிடம் விளக்கம் கேட்டதாகவும் நான் விளக்கம் சொன்ன பின்பு தான் லஞ்ச ஒழிப்பு ஆய்வாளர் என்னிடம் பணம் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டதாகவும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். லஞ்ச ஒழிப்பு போலீசார் என்னை

P. [signature] 15/3/16

விசாரித்த போது லஞ்ச ஒழிப்புஅலுவலகத்தில் செய்முறை பயிற்சி செய்த போது முத்துச்சாமியிடம் வலது கையை கரைசலில் நனைத்து கலர் மாற்றம் ஏற்படாத பின்னர் மீண்டும் இடது கையை நனைத்து அதிலும் மாற்றம் ஏற்படவில்லை என நான் கூறவில்லை. அதே போல் லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்த போது முத்துச்சாமி கையை துணியில் துடைத்துக் கொண்டதாக நான் சொல்லி உள்ளேன். லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்த போது பினாப்தலின் பவுடரை தடவிய பின்னர் முத்துச்சாமியை அந்த பணத்தை எண்ணும்படி கூறி சோடியம் கார்பனேட் கரைசலில் கையை நனைக்கும்படி ஆய்வாளர் சொல்ல முத்துச்சாமி இரு கைகளையும் கரைசலில் நனைத்ததாக சொல்லவில்லை.லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையில் முத்துச்சாமி இரண்டு கைகளையும் கரைத்த கரைசல் ஒரு டம்ளரில் தான் அவ்வாறு நனைத்தார் என்று நான் சொல்லவில்லை. ரூபாயை முத்துச்சாமி எனது மேல்பாக்கெட்டில் வைத்ததாகவும் அது பத்து தாள்கள் என்றும் அது சிவா என்ற சிவசுப்பிரமணித்திற்கு கொடுப்பதற்காக என்று நான் கூறவில்லை.அதே போல் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையில் பினாப்தலின் பவுடர் தடவிய 10 ஐ நுறு ரூபாய் நோட்டுக்களை முத்துச்சாமி எனது வலது பேண்ட் பாக்கெட்டில் வைத்ததாக சொல்லவில்லை .என்னை லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரித்த போது அந்த பணத்தை சிவசுப்பிரமணியம் மற்றும் நடராஜன் கேட்கும் போது கொடுங்கள் என்று நான் கூறி இருக்கிறேன்.லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையில் விஷ்ணு டீக்கடை இருந்ததாக சொல்லி உள்ளேன்.லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையில் எனக்கு ரிப்போர்ட் தயாராகி விட்டது, என்றும் தான் கிளியர் செய்து தருவதாகவும் பணத்தை கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டதாகவும் நான் சொல்லி உள்ளேன். அதே போல் ரூ10000 த்தை எடுத்து சிவசுப்பிரமணியிடம் கொடுத்ததாக சொல்லிஉள்ளேன். லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையில் எதிரிகள் இருவரும் டீக்கு ஆர்டர் கொடுத்து விட்டு தான் கிளியர் செய்து தருவதாக எதிரிகள் சொல்லவில்லை என்றால் சரிதான். லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணையில் என்னை காத்திருக்கும்படி சொன்னதாகவும் அப்போது அரசு சாட்சிகள் இருவர் வந்ததாகவும் சொல்லி உள்ளேன். நான் இதே நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன போது 3.3.10 ம் தேதி எனக்கும் எதிரிகள் இருவருக்கும் இடையே மாலை நடைபெற்ற உரையாடலை தவிர வேறு எந்த உரையாடலும் எங்களுக்குள் நிகழவில்லை என்றால் சரிதான். இந்த சம்பவத்திற்கு முன்பாக விஷ்ணு டீக்கடைக்கு 3.3.10ம் தேதிக்கு முன்பாக சென்றதில்லை. ஆனால் பார்த்துள்ளேன்.நான் டீக்கடைக்கு சென்ற போது எங்களை தவிர எத்தனை பேர்

R. [signature] 15/3/16

இருந்தார்கள்.அன்றைய தேதியில் டீ மாஸ்டர்.கடை உரிமையாளர். என்று தெரியாது. நான் அடையாளம் காட்டி தான் லஞ்ச ஒழிப்பு போலீசார் எதிரிகளை கைது செய்தார்கள். நான் சொன்னது போன்று எந்த தேதியிலும் எதிரிகள் என்னை சந்திக்கவில்லை என்றும் லஞ்சமாக பணம் கேட்கவில்லை என்றும் நான் லஞ்சமாக பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு முதல் எதிரி யார் என்றே தெரியாது என்பதால் தான் அவரை குறித்த விவரங்களை புகார் மற்றும் லஞ்ச ஒழிப்பு போலீஸ் விசாரணையில் முன்னுக்குப் பின் முரணாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரி சிவில் சப்ளையில் பறக்கும் படையில் வேலை பார்த்து பலமுறை என்னை பற்றியும் என் நண்பர்களை பற்றியும் உயர் அதிகாரிகளுக்கும். சிவில்சப்ளை சிஐடி போலீசாருக்கும் தகவல் கொடுத்தார் என்றும் அதனால் எங்கள் தொழில் பாதிக்கப்பட்டதால் அவர் மீது வன்மம் கொண்டு இந்த புகாரை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர் மீது மட்டும் புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்பதால் மாவட்ட வழங்கல் அலுவலகத்தில் உள்ள யார் மீதாவது புகாரை சேர்த்தால் தான் எடுத்துக் கொள்வார்கள் என்று 1ம் எதிரி யின் பெயர் தெரியாத நிலையிலும் அவரையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 3.3.10ம் தேதி எதிரிகள் இருவரும் வெளியில் உள்ள தேநீர் கடையில் தேநீர் அருந்திக் கொண்டு இருக்கும் போது அவர்களது சட்டை பைகளில் பணத்தை அடுத்தடுத்து திணித்தேன் என்றும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிரிகள் பணத்தை வெளியே எடுத்த போது அங்கு லஞ்ச ஒழிப்பு போலீசார் வந்து எதிரிகளை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னிடம் லஞ்சமாக பணம் கேட்கவில்லை என்றும் நான் லஞ்சமாக பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ.2 புகார் என்னால் கொடுக்கப்பட்ட பொய் புகார் என்றால் சரியல்ல. அதசாஆ.4 மகஜரும் செய்முறை பயிற்சி எதுவும் இல்லாமல் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. . நான் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

P. [signature] 15/3/16

Typed down to my dictation, in my presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused as admitted by the witness to be correct.

[signature] 15/3/16

Chief Judicial Magistrate
Dindigul

22

27/48

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**Spl. C.C. NO.14 /2014**

அசா : 3
பெயர்: செழியன்
தகப்பனார் பெயர் : குமார்
கிராமம்: திண்டுக்கல்
தாலுகா: திண்டுக்கல்

தொழில் கிராம உதவியாளர்
மதம் : இந்து
வயது : 50
தேதி : 11.08.2016

1873ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

முதல் விசாரணை

நான் தற்போது திண்டுக்கல் கதர் கிராம தொழில் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். 3.3.10 ம் தேதியன்று என்னுடைய உதவி இயக்குநர் பாலகுமார் உத்தரவின் பேரில் நான் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பகல் 2 மணிக்கு ஆஜரானேன். எனக்கு என் உதவி இயக்குநர் வழங்கிய உத்தரவு அத்சாஆ.5. ஆய்வாளர் சுந்தரராஜனை அங்கு சந்தித்தேன்.மேலும் அங்கு மீன் வளத்துறையில் பணியாற்றும் முத்துசாமி என்பவரும் அலுவலகத்திற்கு வந்தார். எங்கள் இருவரையும் ஒருவருக்கொருவர் ஆய்வாளர் பரஸ்பர அறிமுகம் செய்து வைத்தார். அப்போது அங்கு இருந்த ஜெயராமன் என்பவரையும் எங்கள் இருவருக்கும் ஆய்வாளர் அறிமுகம் செய்து வைத்தார். ஜெயராமன் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை எங்கள் இருவருக்கும் கொடுத்து படித்து பார்க்குமாறு ஆய்வாளர் கூறினார். நாங்கள் இருவரும் முதல் தகவல் அறிக்கையை படித்துப் பார்த்தோம். பின்னர் ஜெயராமனிடம் புகார் பற்றி கேட்டு தெரிந்து கொண்டோம். அப்போது அவர் தன் மீது உணவு பொருள் கடத்தல் பேரோலுசார் வழக்கு பதிவு செய்து இருப்பதாகவும் அந்த பதிவு செய்யப்பட்ட வழக்கின் அறிக்கையை 6 (**A**) **DRO** வுக்கு அனுப்புவதற்காகவும் அது சம்பந்தமாக 25.2.2010 ம் தேதியன்று மாலை 6 மணிக்கு திண்டுக்கல் ரயில்வே ஸ்டேசன் எதிரில் நடராஜன் என்பவர் ஜெயராமனை சந்தித்ததாகவும் மேறப்டி 6 (**A**) மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்க சிவா என்பவர் மூலம் ஏற்பாடு செய்வதாகவும் அதற்கு தனக்கு ரூ.5000 மும் சிவா என்பவருக்கு ரூ.10000 மும் கொடுக்க வேண்டும் என்று கூறியதாகவும் அதன் பின்னர் 2.3.10 ம் தேதியன்று காலை சுமார் 11 மணிக்கு திண்டுக்கல் நீதிமன்றம் முன்பு ஜெயராமனை நடராஜன் என்பவர் சந்தித்து மேற்படி **DRO** கோர்ட்டில் உள்ள வழக்கை சாதகமாக முடிக்க தனது ரூ.5000 மும் சிவா என்பவருக்கு ரூ.10000 மும் தயார் செய்து விட்டு மாவட்ட வழங்கல் அலுவலகத்தில்

சிவா என்பவரை சந்திக்குமாறும் கூறினார். அன்று சுமார் 12.45 மணிக்கு மாவட்ட வழங்கல் அலுவலகத்திற்கு ஜெயராமன் போனதாகவும் அங்கு சிவாவும் நடவராஜனும் இருந்ததாகவும் அப்போது சிவா என்பவர் தனக்குரூ.10000 மும் நடராஜனுக்கு ரூ5000 மும் கொடுத்தால் உணவு கட்டுப்பாடு அலுவலர் கொடுத்த வழக்கை சாதகமாக முடித்து தருவதாகவும், அது சம்பந்தமாக குறிப்பாணை தயார் செய்வதாகவும் மேற்படி பணத்தை மறுநாள் கரூர் **NH** ரோட்டில் உள்ள அம்சவள்ளி ஓட்டல் பக்கம் வந்து மேற்படி பணத்தை கொடுக்குமாறு சொன்னார் மேற்படி சம்பவங்கள் தான் ஜெயராமன் கொடுத்த புகாரில் சொல்லப்பட்டு இருந்தது.அப்போது ஆய்வாளர் ஜெயராமனிடம் சிவாவுக்கும் நடராஜனுக்கும் கொடுக்க வேண்டிய கையூட்டு பணம் கொண்டு வந்திருக்கிறீர்காள என்று கேட்டார்.அவரும் கொண்டு வந்திருப்பாக சொன்னார். பணத்தை எடுத்து ஆய்வாளர் சொன்னதன் பேரில் அரசு சாட்சி முத்து சாமியிடம் கொடுத்தார். முத்துசாமி மேற்படி பணத்தை எண்ணிப்பார்த்துஅதில் ஆயிரம் ரூபாய் நோட்டு 10 ம், ஐநூறு ரூபாய் நோட்டு 10 ம் இருப்பதாக அரசு சாட்சிமுத்துசாமி கூறினார். அப்போது தயாரிக்கப்பட்ட மகஜரில் மேற்படி ரூபாயின் எண்களை ஆய்வாளர் குறித்து கொண்டார். ஆய்வாளர் தலைமை காவலர் பாலசுப்பிரமணியன் என்பவரை அழைத்து சோடியம் கார்பனேட் கரைசல் தயாரிக்குமாறு சொன்னார். அவர் ஒரு கண்ணாடி டம்ளரில் முக்கால் அளவு தண்ணீர் ஊற்றி சோடியம் கார்பனேட் கரைசல் போட்டு கரைசல் தயாரித்தார். ஆய்வாளர் முத்துசாமியை அழைத்து மீண்டும் மேற்படி பணத்தை எண்ணிப் பார்க்குமாறு சொன்னார். அவரும் எண்ணிப் பார்த்தார். அதன் பின்னர் ஆய்வாளர் முத்துசாமியின் கைவிரல்களை சோடியம் கார்பனேட் கரைசலில் நனைக்குமாறு சொன்னார். அவரும் கைவிரல்களை நனைத்தார். அப்போது சோடியம் கார்பனேட் கரைசலில் எவ்வித நிறமாற்றமும் ஏற்படவில்லை. மீண்டும் ஆய்வாளர் தலைமை காவலரை அழைத்து மேற்படி ரூபாயின் பினாப்தலின் பவுடரை தடவச் சொன்னார். ஆய்வாளர் முத்துச்சாமியை அழைத்து ரூபாயை எண்ணிப்பார்க்குமாறு சொன்னார். அவரும் எண்ணிப் பார்த்தார்.மீண்டும் முத்துசாமியை சோடியம் கார்பனேட் கரைசலில் கைவிரல்களை நனைக்குமாறு சொன்னார். அவரும் கைவிரல்களை நனைத்தார்.அப்போது கரைசல் கண்ணுக்கு தெரியக்கூடிய இளம் சிவப்பு நிறமாக மாறியது.அதன் பின் ஆய்வாளர் மேற்படி சோதனை பற்றி விளக்கி கூறினார்.ஆய்வாளர் முத்துசாமியை அழைத்து மேற்படி பணத்தை எடுத்து ஜெயராமனிடம் கொடுக்குமாறு சொன்னார். அவரும் கொடுத்தார்.

ஜெயராமன் மேற்படி பணத்தில் ரூ.10000 த்தை எடுத்து சட்டையின் இடது பக்க வெளிப் பாக்கெட்டில் வைத்தார். ரூ.5000 த்தை தன்னுடைய வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்தார். ரூ.10000 சிவாவுக்கு கொடுக்குமாறும், ரூ.5000 ஐ நடராஜனுக்கு கொடுக்குமாறு கூறினார்.என்னையும் ஜெயராமனையும் திண்டுக்கல் கரூர் ரோட்டில் உள்ள அம்சவள்ளி ஓட்டலில் சென்று எதிரிகளை சந்திக்குமாறும் அவர்களை பணம் கேட்டால் கொடுக்குமாறும் சொன்னார். முத்துசாமி என்பவரை ஆய்வாளர் தன்னுடன் இருக்குமாறும் தலைமை காவலர் பாலசுப்பிரமணியத்தை அலுவலகத்தில் இருக்குமாறு கூறினார். சோதனைக்காக தயாரிக்கப்பட்ட கரைசல் கீழே கொட்டி அழிக்கப்பட்டது. பினாப்தலின் பவுடர் அலுவலகத்திலேயே வைக்கப்பட்டது. நடந்த சம்பவத்திற்கு ஒரு மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டது. மேற்படி மகஜர் 2.15 முதல் 3.15 மணி வரை நடைபெற்றது. அந்த மகஜர் ஏற்கனவே அதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மகஜரில் நான், முத்துசாமி, ஜெயராமன், ஆய்வாளர் கையொப்பம் இட்டோம்.அதன் பின்னர் 3.45 மணிக்கு நான், முத்துசாமி,ஆய்வாளர், போலீஸ் பார்ட்டியினர் அரசு வாகனத்தில் கிளம்பி திண்டுக்கல் கரூர் ரோட்டில் உள்ள அம்சவள்ளி ஓட்டலுக்கு 500 மீட்டர் தூரத்தில் என்னையும் ஜெயராமனையும் இறக்கி விட்டு ஏற்கனவே கூறிய அறிவுரைகளின்படி செயல்படுமாறு ஆய்வாளர் கூறினார். நானும் ஜெயராமனும் அம்சவள்ளி ஓட்டலுக்கு போனோம். அப்போது மாலை சுமார் 4 மணி இருக்கும். அப்போது நடராஜன், சிவா அங்கு இல்லை. ஜெயராமன் நடராஜனுக்கு செல்போன் மூலம் பேசினார். சுமார் 10 நிமிடத்தில் கரூர் திண்டுக்கல் ரோட்டில் உள்ள விஷ்ணு டீக்கடைக்கு வருமாறு சொன்னார். மேற்படி தகவலை ஜெயராமன் ஆய்வாளரிடம் சொன்னார். அதற்கு ஆய்வாளர் அவர்கள் எங்கு கூப்பிடுகிறார்களோ அங்கு செல்லுங்கள் நாங்கள் பின் தொடர்ந்து வருகிறோம் என்றார். பின்னர் நானும் ஜெயராமனும் விஷ்ணு டீக்கடைக்கு சுமார் 4.20 மணிக்கு சென்றோம்.சுமார் 10 நிமிடம் கழித்து 4.30 மணிக்கு சிவாவும் நடராஜனும் விஷ்ணு டீக்கடைக்கு வந்து விட்டார்கள். மேற்படி டீக்கடை அருகில் ஒரு தாழ்வாரம் உள்ளது. அதில் சேர்கள் போடப்பட்டு இருந்தது. அப்போது அங்கு உட்கார்ந்து ஜெயராமன் எதிரியிடம் தனது வழக்கினை சாதகமாக முடித்து தருமாறு கூறினார். அப்போது எதிரி சிவா நாங்கள் கேட்ட பணம் கொண்டு வந்திருக்கிறாயா என்று கேட்டார். அதற்கு ஜெயராமன் கேட்ட பணம் கொண்டு வந்திருப்பதாக கூறி ஜெயராமன் சட்டை பாக்கெட்டில் இருந்த ரூ.10000 த்தை எடுத்து சிவாவிடம் கொடுத்தார். எதிரி சிவா அந்த பணத்தை வாங்கி இரண்டு கையாலும் எண்ணி

சட்டையின் இடது பக்க மேல் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். அப்போது நடராஜன் எனக்குண்டான பணம் கொடுங்க என்று கேட்டார். ஜெயராமன் பணம் கொண்டு வந்திருப்பதாக சொல்லி அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து கொடுத்தார். நடராஜன் இரண்டு கையாலும் பணத்தை வாங்கி எண்ணிப் பார்த்து விட்டு சட்டையின் மேல் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். ஜெயராமன் தன்னுடைய வழக்கை தனக்கு சாதகமாக முடித்து கொடுக்குமாறு கேட்டார். அப்போது எதிரிகள் இருவரும் வழக்கை உங்களுக்கு சாதகமாக முடித்து தருகிறோம். கவலைப்படாமல் போங்கள் என்று கூறினார்கள். நானும் ஜெயராமனும் டீக்கடையை விட்டு வெளியே வந்து ஏற்கனவே ஆய்வாளர் ஜெயராமனுக்கு சொல்லி தந்தபடி சைகையான தலையை கோதி சைகை செய்தார். அதை கண்காணித்த போலீஸ் பார்ட்டி மற்றும் ஆய்வாளர் எங்களிடம் வந்து என்ன நடந்தது என்று ஜெயராமனிடம் கேட்டார். அவர் நடந்த விவரத்தை சொன்னார். என்னிடமும் நடந்த விவரத்தை கேட்டார். நான் நடந்த விவரத்தை சொன்னேன். எங்களை அழைத்து கொண்டு டீக்கடைக்குள் ஆய்வாளர் சென்றார். அப்போது அங்கு இருந்த சிவா மற்றும் நடராஜனை அடையாளம் காட்டினோம். ஆய்வாளர் எதிரிகள் இருவரிடமும் தன்னையும் எங்களையும் அறிமுகப்படுத்தினார். ஜெயராமனை வெளியே இருக்குமாறு ஆய்வாளர் சொன்னார். எதிரிகள் இருவரும் பதற்றமடைந்தனர். அவர்கள் இருவரையும் ஆசுவாசப்படுத்தி பக்கத்தில் இருந்த பார்வதி ஜெராக்ஸ் கடைக்கு ஆய்வாளர் அழைத்து சென்றார். அங்கு இருந்த பிளாஸ்டிக் சேரில் எதிரிகளை உட்கார வைக்கப்பட்டது. எதிரி நடராஜனை ஒரு எஸ்ஐயும் ஒரு காவலரையும் பார்த்துக் கொள்ளுமாறு ஆய்வாளர் கூறினார். பின்பு சிவா அருகில் ஆய்வாளர் வந்து சிவாவிடம் உன் பெயர் என்ன என்று கேட்டார். அவர் தன் பெயர் சிவ சண்முகம் என்றும் சிவா என்று தான் கூப்பிடுவார்கள் என்று சொன்னார். ஆய்வாளர் இரண்டு கண்ணாடி டம்ளரில் சோடியம் கார்பனேட் கரைசல் தயாரித்தார். ஆய்வாளர் எதிரி சிவாவின் வலது கை விரல்களை ஒரு டம்ளரில் நனைக்குமாறு சொன்னார். அவரும் வலது கை விரல்களை நனைத்தார். அப்போது கரைசல் இளம் சிவப்பு நிறமாக மாறியது. சிவாவின் வலது கை விரல்கள் நனைத்த கரைசலை 180 எம்எல் அளவுள்ள பாட்டிலில் 175 எம்எல் ஊற்றி மூடி வெள்ளை துணியால் சுற்றி நூலால் கட்டி அரக்கு சீல் வைக்கப்பட்டது. அந்த சீல் **V A.C. MDU** ஆகும். அதன் பின் ஒரு லேபிள் தயாரிக்கப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் குற்ற எண்.3/10**U/s** 7 **of P.C.Act** 1988 எதிரி சிவசண்முகம் பெயர்,வலது கை விரல்கள் நனைக்கப்பட்ட

கரைசல் என்று எழுதி அதில் நான், மற்றொரு அரசு சாட்சி,எதிரி மற்றும் ஆய்வாளர் கையொப்பம் இட்டோம். பின்னர் சிவாவின் இடது கை விரல்கள் நனைத்த கரைசலை 180 எம்எல் அளவுள்ள பாட்டிலில் 175 எம்எல் ஊற்றி மூடி வெள்ளை துணியால் சுற்றி நூலால் கட்டி அரக்கு சீல் வைக்கப்பட்டது. அந்த சீல் **V A.C. MDU** ஆகும். அதன் பின் ஒரு லேபிள் தயாரிக்கப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் குற்ற எண்.3/10**U/s** 7 **of P.C.Act** 1988 எதிரி சிவசண்முகம் பெயர்,இடது கை விரல்கள் நனைக்கப்பட்ட கரைசல் என்று எழுதி அதில் நான், மற்றொரு அரசு சாட்சி,எதிரி மற்றும் ஆய்வாளர் கையொப்பம் இட்டோம். எதிரியின் சிவசண்முகத்தின் வலது கை விரல்கள் நனைக்கப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டில் சா.பொ.3. எதிரி சிவசண்முகத்தின் இடது கை விரல்கள் நனைக்கப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டில் சா.பொ.4. ஜெயராமனிடம் பெற்ற பணம் எங்கே என்று ஆய்வாளர் சிவசண்முகத்திடம் கேட்டார். சிவசண்முகம் இடது பக்க மேல் பாக்கெட்டில் இருந்து பணத்தை எடுத்து ஆய்வாளர் அறிவுரையின் பேரில் கொடுத்தார். அரசு சாட்சி முத்துசாமி எண்ணிப் பார்த்தார். அதில் 10 ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. அப்போது மேற்படி நோட்டுக்களின் எண்களும் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட மக்ஜரில் உள்ள எண்களும் ஒத்திருந்தது. சிவசண்முகத்திற்கு ஒரு மாற்று சட்டை கொடுத்து அவர் அணிந்து இருந்த முழுக்கை சட்டையை வாங்கி பணம் வைத்திருந்த பாக்கெட்டை திருப்பி ஒரு சோடியம் கார்பனேட் கரைசல் தயாரித்து அதில் நனைத்த போது அந்த கரைசலும் இளம் சிவப்பு நிறமாக மாறியது. . அந்த கரைசலை 175 எம்எல் ஊற்றி மூடி வெள்ளை துணியால் சுற்றி நூலால் கட்டி அரக்கு சீல் வைக்கப்பட்டது. லேபிள் தயாரிக்கப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் குற்ற எண்.3/10, **U/s** 7 **of P.C.Act** 1988. அந்த லேபிளில் நான், மற்றொரு அரசு சாட்சி ,ஆய்வாளர், எதிரி ஆகியோர் கையொப்பம் செய்தோம். வழக்கின் குற்ற எண். எதிரி சிவசண்முகம் பெயர், சட்டை பாக்கெட் நனைக்கப்பட்ட கரைசல் என்று எழுதி ஆய்வாளர் கையொப்பம் இட்டார். சிவசண்முகத்தின் இடது பக்க பாக்கெட்டின் உள்பக்கம் நனைத்து சேகரிக்கப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டில் சா.பொ.5. சிவசண்முகம் அணிந்து இருந்த முழுக்கை சட்டை சா.பொ.6. அப்போது சிவசண்முகத்திடம் ஜெயராமனிடம் எதற்காக பணம் வாங்கினீர்கள் என்று ஆய்வாளர் கேட்டார்.ஜெயராமனுக்கு சொந்தமான வாகனம் ஒன்றை **DRO** விடம் இருந்து திரும்ப பெறுவதற்காக வாங்கிய பணம் என்று கூறினார். இதன் பின்னர் நடராஜனை பாதுகாப்பில் வைத்திருந்த எஸ்.ஐ மற்றும் தலைமை காவலரிடம் சிவசண்முகத்தை

பொறுப்பில் கொடுத்து விட்டு எதிரி நடராஜனை அழைத்து அவரை உட்கார வைத்து ஆய்வாளர் எதிரி நடராஜனின் வலது கை விரல்களை ஒரு டம்ளரில் நனைக்குமாறு சொன்னார். அவரும் வலது கை விரல்களை நனைத்தார். அப்போது கரைசல் இளம் சிவப்பு நிறமாக மாறியது. நடராஜனின் வலது கை விரல்கள் நனைத்த கரைசலை 180 எம்எல் அளவுள்ள பாட்டிலில் 175 எம்எல் ஊற்றி மூடி வெள்ளை துணியால் சுற்றி நூலால் கட்டி அரக்கு சீல் வைக்கப்பட்டது. அந்த சீல் **V A.C. MDU** ஆகும். அதன் பின் ஒரு லேபிள் தயாரிக்கப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் குற்ற எண்.3/10**U/s** 7 **of P.C.Act** 1988 எதிரி நடராஜன் பெயர்,வலது கை விரல்கள் நனைக்கப்பட்ட கரைசல் என்று எழுதி அதில் நான், மற்றொரு அரசு சாட்சி,எதிரி மற்றும் ஆய்வாளர் கையொப்பம் இட்டோம். பின்னர் நடராஜனின் இடது கை விரல்கள் நனைத்த கரைசலை 180 எம்எல் அளவுள்ள பாட்டிலில் 175 எம்எல் ஊற்றி மூடி வெள்ளை துணியால் சுற்றி நூலால் கட்டி அரக்கு சீல் வைக்கப்பட்டது. அந்த சீல் **V A.C. MDU** ஆகும். அதன் பின் ஒரு லேபிள் தயாரிக்கப்பட்டது. அந்த லேபிளில் வழக்கின் குற்ற எண்.3/10**U/s** 7 **of P.C.Act** 1988 எதிரி சிவசண்முகம் பெயர்,இடது கை விரல்கள் நனைக்கப்பட்ட கரைசல் என்று எழுதி அதில் நான், மற்றொரு அரசு சாட்சி,எதிரி மற்றும் ஆய்வாளர் கையொப்பம் இட்டோம். எதிரி நடராஜன் வலது கை விரல்கள் நனைக்கப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டில் சா.பொ.7. எதிரி நடராஜன் இடது கை விரல்கள் நனைக்கப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டில் சா.பொ.8, அதன் பின்னர் எதிரி நடராஜனுக்கு ஒரு மாற்று சட்டை ஆய்வாளர் கொடுத்தார். அவர் சட்டையை கழற்றி கொடுத்தார். அதை ஆய்வாளர் சட்டையின் பாக்கெட்டை வெளிப்புறமாக திருப்பி சோடியம் கார்பனேட் கரைசலில் நனைக்க அது இளம் சிவப்பு நிறமாக மாறியது. அந்த கரைசலில் 180 எம்எல் அளவுள்ள பாட்டிலில் 175 எம்எல் ஊற்றி மூடி அடைத்து துணியால் சுற்றி நூலால் கட்டி ஒரு லேபிள் ஒட்டப்பட்டது. அதில் குற்ற எண்., எதிரி நடராஜன் பெயர், சட்டை பாக்கெட் நனைக்கப்பட்ட கரைசல் என்று எழுதி ஆய்வாளர் கையொப்பம் இட்டார்.அதில் இரண்டு அரசு சாட்சி, ஆய்வாளர், எதிரி நடராஜன் கையொப்பம் இட்டோம். மேற்படி எதிரி நடராஜனின் இடது பக்க சட்டை பாக்கெட் நனைக்கப்பட்ட கரைசல் அடங்கிய பாட்டில் சா. பொ.9. நடராஜன் அணிந்திருந்த சட்டை சா.பொ.10. என்ன காரணத்திற்காக ஜெயராமனிடம் பணம் வாங்கினீர்கள் என்று ஆய்வாளர் நடராஜனிடம் கேட்டார். அதற்கு எதிரி நடராஜன் தான் பணம் வாங்கவில்லை என்றும் அவராகவே பணம் பாக்கெட்டில் வைத்து விட்டதாக சொன்னார். அதன் பின்னர்

காரணத்தை தெரிவித்து எதிரிகள் சிவசண்முகம் மற்றும் நடராஜன் ஆகியோரை சுமார் 7.50 மணிக்கு கைது செய்தார். மேற்படி கைது குறித்து மாவட்ட வழங்கல் அலுவலகத்திற்கு ஆய்வாளர் தகவல் தெரிவித்தார். மேற்படி தகவலின் பேரில் மாவட்ட வழங்கல் அலுவலகத்தின் கண்காணிப்பாளர், திரு.நீதிராஜன் என்பவர் அங்கு வந்தார். அங்கு நடந்த நடவடிக்கைக்கு மாலை 4.50 மணி முதல் 8 மணி வரை நடைபெற்ற நிகழ்வுக்கு ஒரு மகஜர் ஆய்வாளர் தயாரித்தார். அதில் நான், அரசு சாட்சி முத்துசாமி, ஆய்வாளர் மற்றும் எதிரிகள் இருவரும் கையொப்பம் இட்டோம். கைப்பற்றுதல் மகஜர் அதசாஆ.6. அதன் நகல் ஒன்றை கண்காணிப்பாளருக்கு ஆய்வாளர் கொடுத்தார். அவர் அதை கையொப்பம் போட்டு பெற்று கொண்டார். மேற்படி மகஜரில் கரைசல் அடங்கிய 6 பாட்டில்கள், எதிரி சிவசண்முகத்திடம் இருந்து கைப்பற்றிய ரூ10000 மற்றும் நடராஜனிடம் கைப்பற்றிய பணம் ரூ.5000, 2 சட்டை கைப்பற்றப்பட்டது. ஆய்வாளர் காவல்ரை அழைத்து எதிரிகளின் வீட்டை சோதனை செய்ய முன் கடிதம் ஒன்றை மாவட்ட தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பினார். இரவு 8.40 முதல் இரவு 9.10 மணி வரை சிவசண்முகம் வீடு சோதனை செய்யப்பட்டது. சோதனையில் எதுவும் கைப்பற்றப்படவில்லை. சோதனை ஜாபிதாவில் நாங்கள் கையொப்பமிட்டோம். சோதனை ஜாபிதா அதசாஆ.7. மேற்படி சோதனை ஜாபிதாவின் நகல் ஒன்று எதிரிசிவசண்முகத்க்கு கொடுத்து ஒப்புதல் பெறப்பட்டது. அதன் பின்னர்.9.25 முதல் 10 மணி வரை எதிரி நடராஜன் வீடு சோதனை செய்யப்பட்டது. சோதனையில் எதுவும் கைப்பற்றப்படவில்லை. சோதனை ஜாபிதாவில் நாங்கள் கையொப்பமிட்டோம். சோதனை ஜாபிதா அதசாஆ.8. மேற்படி சோதனை ஜாபிதாவின் நகல் ஒன்று எதிரி நடராஜனுக்கு கொடுத்து ஒப்புதல் பெறப்பட்டது. சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் ஆய்வாளர் தயாரித்தார். அது அதசாஆ.9.பின்னர் நாங்கள் அனைவரும் சுமார் 10.15 மணிக்கு ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்தோம். ஆய்வாளர் உத்தரவின் பேரில் நானும் அரசு சாட்சி முத்துசாமியும் வீட்டிற்கு சென்று விட்டோம். மறுநாள் 4.3.10ல் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation, in my Presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

Chief Judicial Magistrate
Dindigul
11/08/16

12

13

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்.

**Spl.C.C. NO.14/2014**

அசா : 3 பெயர் : செழியன் தேதி : 20.09.2016

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

கதர் கிராம தொழில் துறையானது ஒரு வாரியம் என்றால் சரிதான். நேரடியாக அரசு நிறுவனம் அல்ல என்றால் சரிதான். கதர் கிராம தொழில் பணியாற்றுபவர்கள் அரச ஊழியர்கள் அல்ல என்றால் சரிதான். கதர் கிராம துறையை நிர்வகிப்பதற்கு தனியாக போர்டு உண்டு என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணி என்பது 4ம் நிலை பணி என்றால் சரிதான். எங்கள் உதவி இயக்குநர் பாலகுமார் க்கு திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு துறையில் இருந்து ஆய்வாளர் அவர்கள் கடிதம் அனுப்பி அரசு சாட்சியாக வரச் சொன்னரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாலகுமார் என்னை போக சொல்லி வாய் மொழி உத்தரவு தான் வழங்கினார். எழுத்து மூலமாக கொடுக்கவில்லை. நான் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு போன பின்பு தான் எதற்காக அங்கு சென்றோம் எந்த வழக்கிற்காக சென்றோம் என்ற விவரம் தெரியும். எனது பணி கதர் கிராம பணி மட்டும் தான். பாலகுமார் என்னை போக சொல்லும் முன்பு நான் அந்த மாதிரி போகிறேன் எனக்கு அனுமதி வேண்டும் என்று முன் அனுமதி கேட்கவில்லை. முன் அனுமதியும் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அசா2 ஜெயராமன் லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு நான் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் செல்வதற்கு முன்பாக எப்போது சென்றார் என்றும் அங்கு அவரும் லஞ்ச ஒழிப்பு துறையினரும் என்ன பேசி கொண்டார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.ரேசன் உணவு பொருட்களை கடத்துவது குற்றம் என்ற விவரம் எனக்கு தெரியும். ரேசன் பொருட்களை கடத்துபவர்கள் மீது சிவில் சப்ளை அதிகாரிகள் குடிமை பொருள் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். ரேசன் சம்பந்தப்பட்ட பொருட்களை கடத்துவது சம்பந்தமாக போலீசார் கேஸ் போட்டு குடிமை பொருள் அதிகாரிகள் வழக்கு செய்த பின்னர் நீதிமன்றம் மூலமாக கடத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்றால் சரிதான். ரேசன் அரிசி கடத்துபவர்களை விசாரித்து தீர்ப்பு வழங்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என்றால் சரிதான். நான் இந்த வழக்குக்கு முன்பு திண்டுக்கல் லஞ்ச ஒழிப்பு அலு வலகம் சென்றது இல்லை. 32 வருடமாக கதர் கிராம தொழில் துறையில் பணியாற்றி வருகிறேன். திண்டுக்கல் கதர் கிராம தொழில் துறை டிப்போவில் ஏராளமான பொருட்கள் மோசடி நடந்துள்ளது என்று பல அலுவலர்கள் மீது லஞ்ச ஒழிப்பு

துறையினர் நடவடிக்கை எடுத்த விவரம் எனக்கு தெரியும். அது சம்பந்தப்பட்ட ஆடிட்களை நான் பார்த்துள்ளேன். எனக்கு லஞ்ச ஒழிப்பு வழக்குகளில் என்னென்ன வழக்குகளுக்கு என்னென்ன நடைமுறைகளை பின்பற்றுவார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அசா2 க்கும் எதிரிகளுக்கும் ஏற்கனவே **Motive** ஏதேனும் இருந்ததா என்று எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கில் அசா2 ஜெயராமனை நான் சந்திப்பதற்கு முன்பாக அசா2 ம் எதிரிகளும் சந்தித்து கொண்டார்களா என்றும் எங்கெங்கு எதற்காக சந்தித்து கொண்டார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 3.3.10 ம் தேதி அசா2 ஜெயராமன் என்ன நிறமுள்ள பேண்ட் மற்றும் சட்டை அணிந்து இருந்தார் என்ற விவரத்தை நான் ஆய்வாளர் விசாரித்த போது கூறவில்லை என்றால் சரிதான். 3.3.10 ம் தேதி எந்த எண்ணுள்ள வாகனத்தில் ஓட்டலுக்கு சென்றோம் என்ற விவரமோ, எந்த எண்ணுள்ள வாகனத்தில் எதிரிகள் வீடு சோதனைக்கு சென்றோம் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 3.3.10 ம் தேதிக்கு முன்பாக நான் அம்சவள்ளி ஓட்டலுக்கு சென்றதில்லை.அதே போல் விஷ் ணு டீக்கடைக்கும் சென்றதில்லை. விஷ்ணு டீக்கடை என்பது கரூர் மதுரை நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.விஷ்ணு டீக்கடையை சுற்றிலும் கடைகளும் அடுக்கு மாடி குடியிருப்புகளும்உ ள்ளது என்றால் சரிதான். கடையின் முன்பகுதி கிழக்கு நோக்கி உள்ளது என்றால் சரிதான். அன்றைய தேதியில் ஒரே ஒரு மாதிரி வரைபடம் தான் லஞ்ச ஒழிப்பு போலீசார் தயாரித்தனர் என்றால் சரிதான்.அதசாஆ 9 ல் விஷ்ணு டீக்கடை எந்த பக்கம் வாசல் உள்ளது என்பதும் அங்கு தாழ்வாரம் உள்ளதாகவோ, சேர்கள் போடப்பட்டதாகவோ எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விஷ்ணு டீக்கடை என்று எழுதப்பட்டதை தவிர வேறு எந்த பொருளும் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். விஷ்ணு டீக்கடையில் ஆட்கள் இருந்ததாகவோ நான் இருந்ததாகவோ மற்றும் எதிரிகள் இருந்ததாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதசாஆ 9 ல் லஞ்ச ஒழிப்பு போலீசார் நின்று இருந்ததாகவோ அவர்கள் பார்த்ததாகவோ குறிப்புகள் இல்லை என்றால் சரிதான்.எனக்கு இந்த வழக்கில் ஜெயராமன், நடராஜன் போன் நம்பர் தெரியாது என்றால் சரிதான். ஆய்வாளர் சுந்தரராஜன் செல்போன் எண்ணும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.என்னை இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்த போது விஷ்ணு டீக்கடையில் முதன் முதலில் எதிரிகளை பார்த்தவுடன் ஜெயராமன் தனது வழக்குகளை முடித்து தருமாறு கூறியதாகவும் அதற்கு பிறகு தான் எதிரிகள் பணம் கேட்டதாகவும் நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்த போது பணத்தை இரு எதிரிகளும் வாங்கி வைத்துக் கொண்ட போது அசா2

ஜெய்ராமன் தனது வழக்கை தனக்கு சாதகமாக முடித்து கொடுக்குமாறு கேட்டதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.இந்த வழக்கில் எந்த இடத்தில் பணம் கொடுக்கப்பட்டதோ அந்த இடத்தில் வைத்து கரைசல்கள் தயாரிக்கவில்லை என்றால் சரிதான். பார்வதி ஜெராக்ஸ் கடையில் வைத்து கரைசல்கள் ஆய்வாளர் தயாரித்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். கரைசல்கள் தயாரித்த இடம் எதுவென்று மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜரில் சொல்லவில்லை என்றால் சரிதான். அன்றைய தேதியில் எந்த ஆவணங்களும் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.அசா2 ஜெயராமன் என்னென்ன வாகனம் வைத்துள்ளார், அதற்குரிய பதிவெண்கள் என்ன, என்ன வகையான வாகனங்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் இருவரும் தமிழ்நாடு அரசு வருவாய் துறையில் பணியாற்றுபவர்கள் என்றும் அவர்களுக்கு என்னென்ன அதிகாரம் வழ்ங்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. 3.3.10ம் தேதி லஞ்ச ஒழிப்பு ஆய்வாளர் சுந்தரராஜன் யாரிடமும் எந்த வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும் பதிவு செய்யவில்லை என்றாலும் சரிதான்.அசா2 ஜெயராமன் மீது திண்டுக்கல் மற்றும் பிற மாவட்டங்களில் என்னென்ன வழக்குகள் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது . நான் சொன்னது போல் எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும் நான் சொன்ன நேரத்திலசொன்ன முறையில் என்னை உயர் அதிகாரி லஞ்ச ஒழிப்பு அலுவலகத்திற்கு போக சொல்லவில்லை என்றும் அதனால் தான் என்னால் அது சம்பந்தப்பட்ட உத்தரவு எதையும் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் லஞ்ச ஒழிப்பு அவலகத்தில் முதல் தகவல் அறிககை என்னிடம் வழங்கப்படவில்லை என்றும் செய்முறை பயிற்சிகள் எதுவும் என் முன்பாக செய்து காட்டப்படவில்லை என்றும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் எதிரிகள் இருவரும் லஞ்சமாக அசா2 யிடம் பணம் கேட்கவில்லை என்றும் லஞ்சமாக பணம் எதுவும் எதிரிகள் பெறவில்லை என்றும், லஞ்ச ஒழிப்பு போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.3.3.10ம் தேதி எதிரிகள் இருவரும் தேநீர் கடையில் தேநீர் அருந்திக் கொண்டிருக்கும் போது அசா2 ஜெயராமன் எதிரிகளின் சட்டை பையில் பணத்தை திணித்தார் என்றும், பதறி எதிரிகள் இருவரும் பணத்தை வெளியில் எடுத்த போது லஞ்ச ஒழிப்பு போலீசார் அவர்கள் இருவரையும் பிடித்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் ஆவணங்களையும் தயாரிக்கவில்லை என்றும் சான்று பொருள் கைப்பற்றவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. லஞ்ச

ஒழிப்பு போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, in my presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct

Chief Judicial Magistrate
Dindigul
20/09/16

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**Spl. C.C.** 14 /2014

அசா 4
பெயர்: தனுஸ்லாஷ்
தகப்பனார் பெயர் : வேலாயுதசாமி
கிராமம்: முத்தழகுபட்டி
தாலுகா: திண்டுக்கல் 2

தொழில் பழைய இரும்பு வியாபாரம்
மதம் : கிறிஸ்தவம்
வயது : 56
தேதி : 19.09.2018

1873ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

அரசு தரப்பு சாட்சி 7 திரு.தனுஸ்லாஷ் என்பவர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் முத்தழகுபட்டியில் வசிக்கிறேன். பழைய இரும்பு வியாபாரம் செய்கிறேன். கடந்த 14 வருடங்களுக்கு முன்பு அரசு வழங்கும் வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளிடம் இருந்து அரிசி வாங்கி வியாபாரம் செய்து வந்தேன்.அந்த சமயம் ஜெயக்குமார் , சேகர், ஜெயராமன் ஆகியோருடன் அரிசி வியாபாரம் செய்து வந்தேன். உணவு கட்டுப்பாடு அதிகாரிகளின் கெடுபிடி காரணத்தால் அந்த வியாபாரத்தில் இருந்து விலகி விட்டேன் . பிறகு 2.1.2010 ல் ஒட்டன்சத்திரம் அருகே உணவு கட்டுப்பாடு (**Food Cell**) அதிகாரி ரேசன் அரிசி கடத்திய லாரியை பிடித்து வழக்கு பதிவு செய்தார்கள். அதில் என்னையும் என் நண்பர்கள் ஜெயராமன், ஜெயகுமார், சேகர் ஆகிய நால்வர் மீதும் வழக்கு பதிவு செய்தார்கள். நாங்கள் செசன்ஸ் கோர்ட்டில் முன் ஜாமீன் பெற்று தினமும் காலை 10.30 மணிக்கு நிபந்தனை ஜாமீனில் கையெழுத்து போட்டு வந்தோம். கடந்த 25.2.2010 அன்று திண்டுக்கல் ரயில்வே ஸ்டேசனுக்கு அருகில் மாலை 6 மணிக்கு எனது நண்பர் ஜெயராமனிடம் **Flying Squad Officer** ( பறக்கும்படை வருவாய் அதிகாரி) நடராஜன் ஒட்டன்சத்திரம் ரேசன் அரிசி லாரி பிடிபட்ட வழக்கில் வந்து உணவு கட்டுப்பாடு ரேசன் வழக்கிற்கு 6**A** அறிக்கைப்படி மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகத்திற்கு நேர் விசாரணைக்கு வருவதாகவும் தாங்கள் **DSO** அலுவலகத்தில் பணிபுரியும் கிளார்க் சிவா அவர்கள் மூலமாக அறிக்கை தயார் செய்து அதற்கு லஞ்சமாக ஆர்.ஐ .நடராஜனுக்கு ரூ .5000/மும் . கிளார்க் சிவாவிற்கு ரூ.10000/மும் கொடுத்தால் எங்களுக்கு சாதகமாக செய்து விடுவதாக சொன்னார். அதை ஜெயராமன் எங்களிடம் 2.3.10 ல் திண்டுக்கல் செசன்ஸ் கோர்ட்டில் காலை 11

[illegible]

மணி அளவில் நாங்கள் கையெழுத்து போடும் போது சொன்னார். 3.3.10 ல் 11 மணி அளவில் கையெழுத்து போடும் போது அங்கு ஆர்.ஐ . நடராஜன் அங்கு வந்தார். அப்போது ஜெயராமனிடம் கூறியது போல் எங்களிடமும் **DSO** கிளார்க் சிவாவிற்கு ரூ.10000/-மும் தனக்கு ரூ.5000/-மும் கொடுத்தால் நாங்கள் உங்களுக்கு சாதகமாக **DRO** அலுவலகத்தில் அறிக்கை தாக்கல் செய்து எந்த தண்டனையும் இல்லாமல் வழக்கை முடித்து தருவோம் என்று கூறி விட்டு சென்று விட்டார். நாங்கள் இவர்களுக்கு ரூ.15000/- கொடுப்பதை விட லஞ்ச ஒழிப்பு துறை போலீசாரிடம் புகார் கொடுக்கலாம் என்று கூறினோம். ஜெயராமனிடம் நீயே சென்று லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்தில் நடராஜன் மற்றும் சிவா மீது புகார் செய்யும்படி கூறினோம். அன்று மாலை 7 மணி அளவில் லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் கிளார்க் சிவா, ஆர்.ஐ. நடராஜன் ஆகியோர்கள் இருவரும் ஜெயராமனிடம் லஞ்சமாக ரூ.15000/- பெற்றுக் கொள்ளும் போது லஞ்ச ஒழிப்பு போலீசார் பிடித்துக் கொண்டனர் என்று எனக்கு தகவல் மாலை 7 மணிக்கு தெரிந்தது. மறுநாள் 4.3.10 காலை 8 மணிக்கு ஜெயராமன் வீட்டில் கேட்டு தெரிந்து கொண்டேன். இது குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் கு.வி.

லஞ்ச ஒழிப்பு போலீசார் என்னை விசாரிக்கும் போது லஞ்சமாக நாங்கள் பணம் கொடுத்தால் **DRO** அலுவலகத்தில் சொல்லி எங்களுக்கு சாதகமாக எந்தவித தண்டனையும் இல்லாமல் செய்து விடுவதாக நடராஜன் கூறியதாக நான் கூறியிருக்கிறேன். லஞ்சமாக பணம் ஜெயராமன் கொடுத்தது, மற்றும் சிவா , நடராஜன் பெற்றுக் கொண்டது நான் கேள்விப்பட்டது தான். நான் தமிழக அரசால் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட இருக்கும் அரிசியை வாங்கி விற்றேன் என்றால் சரிதான். அவ்வாறு வாங்கி விற்பது குற்றம் என்று தெரியும் என்றால் சரிதான். நான் உடனடியாக வாங்கி விற்பதை நிறுத்தி விட்டேன். என் மீது சிவில் சப்ளையில் இருந்து அரிசி கடத்தல் வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள் என்றால் சரிதான். ஒட்டன்சத்திரத்தில் அரிசி கடத்திய வழக்கில் என்னை எதிரியாக சேர்த்திருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் என்னை கைது செய்ய தேடியதால் நான் முன் ஜாமீன் பெற்றேன் என்றால் சரியல்ல. திண்டுக்கல் சிவில் சப்ளை பறக்கும் படையில் எத்தனை அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று தெரியாது. **DRO** அலுவலகத்தில் என்னென்ன அதிகாரிகள் இருக்கிறார்கள், **DSO** அலுவலகத்தில் என்னென்ன அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. நான் எந்த தவறும் செய்யாததால் லஞ்சம்

~~~
~~~

கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது தெரியும். எனது நண்பர்கள் ஜெயராமன், ஜெயகுமார், சேகர் ஆகியோர்கள் எந்த தவறும் செய்யாததால் அவர்கள் லஞ்சம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது தெரியும். பொய் வழக்கு பதிவு செய்தால் அந்த வழக்கை எதிர் கொண்டு விடுதலை பெறலாம் என்ற விவரம் தெரியும்.நடராஜன் ரூ.15000/- லஞ்சமாக கேட்டார் என்ற விவரம் ஜெயராமன் சொல்லி தான் தெரியும். நான் முதல் விசாரணையில் கூறியது போன்று எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றும், நான் அரிசி கடத்தல் தொழில் செய்து வருவதால் வருவாய் துறை அதிகாரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

V-8LL

Typed down to my dictation, in the presence and hearing and under my personal direction and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

19.09.18

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

SP/CC 14/14

22 ரிஜிஸ்டர் பக்கங்கள் 12

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**Spl.C.C.** 14 /2014

அசா 5
பெயர்: என்.எஸ். கணேசன்
தகப்பனார் பெயர் : M.V. நடராஜசெட்டியார்.
கிராமம்: ABT ரோடு
தாலுகா: பொள்ளாச்சி

தொழில் கூலி
மதம் : இந்து
வயது : 56.
தேதி : 19.09.2018

1873ம் வருடத்திய வகைமுறைச் சட்டம் 10ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

அரசு தரப்பு சாட்சி 8 திரு.என்.எஸ். கணேசன் என்பவர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 5 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் பொள்ளாச்சியில் என் குடும்பத்துடன் வசிக்கிறேன். பழைய டயர் வியாபாரம் செய்து வந்தேன். 2009ம் வருடம் நாமக்கல்லில் லாரி ஒன்று விலைக்கு ரூ.5,95,000/-க்கு வாங்கினேன். லாரியின் பதிவெண் **KA** 01 **AE** 6477 என்பதாகும். அந்த லாரியை தேங்காய் மட்டை லோடு, தவிடு லோடு ஆகியவற்றுக்கு அனுப்பினேன். 1.1.2010 அன்று டிரைவர் ஆனந்தன் என்பவர் திண்டுக்கலில் இருந்து கேரளாவிற்கு அரிசி லோடு ஏற்றுவதாக சொன்னார். அந்த லாரியை 2.1.2010 அன்று ஒட்டன்சத்திரம் அருகில் **Food Cell Officer** ரால் ரேசன் அரிசியை கடத்தியதற்காக வழக்கு பதிவு செய்ததாக 3.1.2010 அன்று தெரிந்து கொண்டேன். அந்த வழக்கில் என் டிரைவர் ஆனந்தனை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி விட்டதாக சொன்னார்கள். அதில் என்னையும் குற்றவாளியாக சேர்க்கப்பட்டதாக கேள்விப்பட்டேன். நான் சென்னை உயர்நீதிமன்ற கிளை , மதுரையில் முன் ஜாமீன் பெற்றேன். பின்னர் லாரியை விடுவிக்க வேண்டி 8.1.10 அன்று நீதிமன்ற உத்தரவு பெற்றேன். லாரியை விடுவிக்க வேண்டிய உத்தரவையும், லாரி சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் திண்டுக்கல் **DRO** அலுவலகத்தில் 3.2.10 அன்று கொடுத்தேன். ஆவணங்களை பரிசீலனை செய்து **DRO** அவர்கள் 26.2.2010 அன்று எனது லாரியை விடுவிக்க உத்தரவு போட்டதாக திண்டுக்கல் **DSO** அலுவலகம் மூலம் தெரிந்து கொண்டேன். லாரியை மீட்பதற்கு ரூ.10000/- வங்கியில் டெபாசிட் செய்ய வேண்டும் என்றும் நோட்டரி பப்ளிக் சான்று கையொப்பம் பெற வேண்டும் என்றும் உத்தரவாகி இருந்தது. அதன்பின் ஒரு மாதம்

N.S. Ganesan

கழித்து லாரியை நான் நீதிமன்ற உத்தரவுபடி **DSO** அலுவலகத்தில் இருந்து பெற்று சென்றேன். அதன்பின் லஞ்ச ஒழிப்பு துறையினர் நடராஜன் என்பவரையும், சிவா என்பவரையும் கைது செய்து விட்டதாக தெரிந்து கொண்டேன். இது சம்பந்தமாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குவி

லாரியை விடுவிக்க ரூ.10000/- லஞ்சமாக கேட்டதாகவும் அதற்காக சிவாவையும் நடராஜனையும் கைது செய்ததாக கேள்விப்பட்டேன். எந்த புரோக்கர் மூலமாக அரிசியை அனுப்புவதற்கு எனக்கு தகவல்கிடைத்தது என்பதை லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய லாரிக்கு பதிவு சான்று என் பெயரில் உள்ளது. யாரிடம் இருந்து அந்த லாரியை எப்போது கிரையம் வாங்கினேன் என்ற விவரம் லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரிக்கையில் கூறவில்லை என்றால் சரிதான். திண்டுக்கல் ஒட்டன்சத்திரம் பகுதியில் நிறைய லாரிகள் உள்ளது என்றால் சரிதான். 1.1.10 அன்று என்னுடைய லாரியில் என்ன பொருட்களை எப்போது, எங்கிருந்து,யாருக்காக எடுத்து வரப்பட்டது என்பது குறித்து நான் சொல்லவில்லை என்றால் சரிதான். ரேசன் அரிசியை வாங்குவதும், அதை லாரியில் எடுத்து சென்று விற்பதும் சட்டப்படி குற்றம் என்று தெரியும். என்னுடைய லாரியில் ரேசன் அரிசி எடுத்து செல்லப்பட்டால் என் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னை கைது செய்து விடுவார்கள் என்ற பயத்தில் முன் ஜாமீன் பெற்றேன் என்றால் சரிதான். என்னை பொறுத்த வரையில் திண்டுக்கல் **DRO** & **DSO** அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகளை எனக்கு தெரியாது. என்னுடைய லாரியை விடுவிக்க பிறப்பித்த உத்தரவில் **DRO** அலுவலகத்தில் ரூ.10000/- டெபாசிட் செய்து விட்டு வாகனத்தை பெற்றுக் கொள்ளலாம் என்று தான் உள்ளது. இந்த நிகழ்வுக்கு பிறகு நான் என்னுடைய டிரைவரை பணியில் இருந்து நீக்கி விட்டேன். சட்டவிரோத செயலில் அவர் ஈடுபட்டதால் அவரை வெளியேற்றி விட்டேன். நான் முதல் விசாரணையில் கூறியது போன்று எந்த நிகழ்வும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

r N S Ganesan

Typed down to my dictation, in my presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

[signature] 19.09.18

**CHIEF JUDICIAL MAGISTRATE**
**DINDIGUL.**

SPl CC 14/14.
22 ஆம் பக்கம் 12

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**Spl.C.C.**14/2014

அசா 6
பெயர்: மாரிமுத்து
தகப்பனார் பெயர் : திருமலைச்சாமி.
கிராமம்: காமாட்சி நகர்
தாலுகா: பொள்ளாட்சி.

தொழில் கூலி
மதம் : இந்து
வயது : 61
தேதி : 10.10.2018

1873ம் வருடத்திய விசுமுறைச் சட்டம் 10ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

அரசு தரப்பு சாட்சி 10 திரு.மாரிமுத்து என்பவர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 6 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் பொள்ளாச்சியில் காமாட்சி நகரில் வசிக்கிறேன். 19976 முதல் நான் பொள்ளாச்சியில் அரிசி கடை வைத்து நடத்தினேன். அதில் நஷ்டம் ஏற்பட்டது. அதன் பின் அரிசி வியாபாரம் பார்த்தேன். பல ஊர்களில் இருந்து அரிசி வாங்கி கேரளாவிற்கு அனுப்பி வைத்தேன். 2.1.2010 அன்று ஒட்டன்சத்திரத்தில் நான் லோடு ஏற்றிய லாரி எண். **KA** 01 **AE** 6477 ல் அரிசி லோடு ஏற்றி அனுப்பினேன். அந்த லோடு அரிசியை திண்டுக்கல்லை சேர்ந்த ஜெய்ராமன், ஜெயக்குமார், சேகர், தனுஷ் ஆகியோர்களிடம் அரிசி வாங்கினேன். மேற்படி லாரி கணேஷ் என்பவருக்கு சொந்தமானது. மேற்படி லாரியானது ஒட்டன்சத்திரத்தில் திண்டுக்கல் **Food Sell** போலீசார் ரேசன் அரிசி கடத்தியதாக வழக்கு பதிவு செய்தனர். அந்த லாரியை ஓட்டிய டிரைவர் ஆனந்த் , ஆனந்தை 2.1.2010 அன்று ஒட்டன்சத்திரத்தில் வைத்து கைது செய்தனர். என் மீது வழக்கு பதிவானதால் நான் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன் ஜாமீன் பெற்றேன். மேற்படி லாரியில் இருந்த அரிசி அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டது. தற்போது **Food Sell** போலீசார் ரேசன் அரிசி கடத்திய வழக்கானது முடிவடைந்து விட்டது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரிகள் தரப்பில் குவி

**Food Sell** போலீசார் என் மீது வழக்கு பதிவு செய்ததால் தான் நான் முன் ஜாமீன் கேட்டு மனு செய்தேன் என்றால் சரிதான் . ஒரு மாநிலத்தில் இருந்து மற்றொரு மாநிலத்திற்கு அரிசி கொண்டு செல்வது என்றால் அதற்கு அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான்.ரேசன் அரிசியை வாங்கி விற்பது குற்றம்

என்பது எனக்கு தெரியும் . என் மீது **FoodShell** போலீசார் ரேசன் அரிசியை வாங்கி விற்பதாக தான் வழக்கு பதிவு செய்திருந்தார்கள் என்றால் சரிதான்.

T. M

Typed down to my dictation, in the presence and hearing and under my personal direction and Superintendence, and interpreted of the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

10.10.18

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

SP/cc 14/14
22 ரிஜிஸ்டர் பக்கஎண் 12.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**Spl. CC** . 14 /2014

அசா :7
பெயர்: சிகாமணி
தகப்பனார் பெயர் :
கிராமம்:
தாலுகா:

தொழில் DSP (Police)
மதம் :
வயது : 58/19
தேதி : 27.09.2019

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

பட்டியல் சாட்சி 11 திரு. சிகாமணி என்பவர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 7 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் உட்கோட்ட காவல் துறை கண்காணிப்பாளராகப் தற்போது பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு திண்டுக்கல் மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறையில் ஆய்வாளராக கடந்த 27.05.2008 முதல் 26.02.2010 வரை பணியாற்றினேன். கடந்த 03.01.2010ம் தேதி அதிகாலை 2.00 மணியளவில் நான் பார்ட்டியுடன் ரேசட்ன அரிசி கடத்தப்படுவதாக தகவல் கிடைத்ததன்பேரில் ஒட்டன்சத்திரம் ஏரியாவில் கண்காணித்தபோது, ஒட்டன்சத்திரம் - தாராபுரம் பிரிவு ரோடு அருகே ஒரு வாகனம் லாரி எண். KA- 01-AE- 6477 என்ற வாகனத்தை பிடித்து சோதனை செய்து பார்த்தபோது 254 ரேசன் அரிசி மூட்டைகள் இருந்தது. மேற்படி லாரியை ஓட்டிய டிரைவர் ஆனந்தன் என்பவரை காரணம் கூறி கைது செய்து விசாரிக்க அவர் தானாக வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி ரேசன்அரிசியை திண்டுக்கலில் வைத்து அரிசி புரோக்கர்கள் ஜெயராமன், ஜெயக்குமார், சேகர், தனுஷ் ஆகியோர்களை வைத்து லோடு ஏற்றியதாக தெரிவித்ததன் பேரில் மேற்படி அரிசியையும், வாகனத்தையும் மகஜரில் கைப்பற்றி எதிரியுடன் அலுவலகம் வந்து குற்ற எண். 5/2010 பிரிவு 6(4)of TNSC (RDCS) Order 1982 r/w 7(1) S(a) (iii) of EC Act 1955 ன் படி வழக்கு பதிவு செய்தேன். ரேசன் அரிசியை தமிழ்நாடு அரசு நுகர் பொருள் வாணிபக் கழக கிட்டங்கியில் ஒப்படைத்தேன். லாரியை அலுவலகத்தில் பாதுகாப்பாக நிறுத்திவைத்தேன். லாரி டிரைவர் ஆனந்தனைத் தவிர வேறு யாரையும் கைது செய்யவில்லை. நான் சிறப்பு

அலுவலாக தூத்துக்குடி CSCID குற்ற எண். 30/2010 வழக்கில் ஆந்திரா பாடர் வரை செல்லவேண்டி இருந்ததால் தனி அலுவலாக விசாரணைக்காக 15 நாட்கள் சென்றுவிட்டேன். அதன்பின்னர் திண்டுக்கல் அலுவலகத்திற்கு பணிக்கு வந்து 2 நாட்கள் அலுவல் பார்த்துவிட்டு 11.02.2010 முதல் 25.02.2010 வரை மருத்துவ விடுப்பில் சென்றுவிட்டேன். 26.02.2010 அன்று எனக்கு பணிமாறுதல் வந்துவிட்டதால் நான் பணிமாறுதலில் சென்றுவிட்டேன். ஆய்வாளர் பொறுப்பில் விருதுநகர் ஆய்வாளரான திரு. ஜெயச்சந்திரன் அவர்களிடம் ஒப்படைத்தேன். மேற்படி வழக்கின் 6(A) அறிக்கையை 20.02.2010 ம் தேதி மேற்படி அறிக்கையை ஆய்வாளர் திரு. ஜெயச்சந்திரன் DRO அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டதாகத் தெரிந்துகொண்டேன். கடந்த 03.03.2010 ம் தேதி மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல் அலுவலக அலுவலர்கள் இருவர் இவ்வழக்கு தொடர்பாக லஞ்ச ஒழிப்பு போலீசாரால் கைது செய்யப்பட்டதாகக் . கேள்விப்பட்டேன். குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை குற்ற எண். 5/2010 வழக்கின் கோப்பு பக்கம் 1 முதல் 128 வரை உள்ளது **அ.சா.ஆ. 10** ஆகும். இவ்வழக்கு சம்மந்தமாக ல.ஒ.பி. காவல் துணைகண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

## எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

ரேசன் அரிசியை விற்பதும் கடத்துவதும் குற்றமாகும் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் கைது செய்த ஆனந்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் கூறியிருந்த நபர்கள் இந்த வழக்கில் தொடர்புடைய நபர்களாக தெரிந்ததால் இவ்வழக்கில் எதிரிகளாக நான் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் நான் எதிரிகளாக குறிப்பிட்டுள்ள 7 நபர்களில் ஆனந்தைத் தவிர மற்ற நபர்கள் தலைமறைவாக இருந்ததால் அவர்களை கைது செய்ய இயலவில்லை என்றால் சரிதான். குடிமைப்பொருள் அத்தியாவசிய தடுப்புச் சட்டத்தின் கீழ் தவறுகள் இழைப்பவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யக்கூடிய அதிகாரம் சிவில் சப்ளைஸ் CID அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்குகளை விசாரிக்கக்கூடிய அதிகாரமும் குற்றவியல் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் நான் குறிப்பிடப்பட்டுள்ள லாரி எண். KA- 01-AE- 6477 என்ற வாகனம் அரிசி கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாக என் புலன் விசாரணையில் தெரியவந்ததால் அந்த லாரியை நான் பாதுகாப்பில்

நிறுத்திவைத்துக்கொண்டேன். அத்தியாவசிய பொருட்கள் சட்டப்படி வருவாய் துறையினருக்கு 6(A)அறிக்கையை விரைவாக அனுப்பவேண்டும் என்றால் சரிதான். இந்த சிவில் சப்ளை வழக்கில் நான் லாரியை கைப்பற்றி அரிசியை பறிமுதல் செய்து எதிரி ஆனந்தனை கைது செய்து, ஒப்புதல் வாக்குமூலம் பெற்று டிரைவர் ஆனந்தனின் ஓட்டுனர் உரிமத்தை ரத்து செய்ய சிபாரிசு செய்தும், லாரியின் பெர்மிட்டை ரத்து செய்ய மாவட்ட ஆட்சியருக்கு சிபாரிசு செய்து நடவடிக்கை எடுத்தேன் என்றால் சரிதான். இந்த சிவில் சப்ளை வழக்கில் இவற்றை தவிர புலன் விசாரணை எதும் நான் வெளி அலுவல் சென்றதால் செய்ய இயலவில்லை என்றால் சரிதான். மேலும் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனம் டாடா ACE TN 57 K 7267 வாகனத்தையும் நான் கைப்பற்றியுள்ளேன்.

DSP/ [illegible]

Typed down to my dictation, in my presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

**Spl. CC** . 14 /2014

அசா .8

பெயர்: ஜெயச்சந்திரன்
தகப்பனார் பெயர் : V. சீனுவையா
கிராமம்: மேலமடை
தாலுகா: மதுரை

தொழில் DSP
மதம் : Hindu
வயது : 49
தேதி : 27.09.2019

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

பட்டியல் சாட்சி 12 திரு. ~~(சிகாமணி)~~ ஜெயச்சந்திரன் என்பவர் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 8 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.**

நான் தற்சமயம் தமிழ்நாடு மின்சாரவாரியம் மதுரையில் விஜிலென்ஸ் துணை காணிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் கடந்த 07.08.2009ம் தேதி முதல் விருதுநகர் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு பிரிவில் ஆய்வாளராகப் பணியாற்றினேன். அந்த காலக்கட்டத்தில் 10.02.2010 முதல் 26.02.2010 வரை திண்டுக்கல் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு துறையில் கூடுதல் பொறுப்பாக பணியாற்றிவந்தேன். மேற்படி பிரிவில் குற்ற எண். 5/2010 சட்டப்பிரிவு 6(4) of TNSC (RDCS) order 1982 r/w 7 (1)(a) (iii) of E.C Act 1955 வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கின் சொத்தான பொதுவிநியோகத் திட்ட ரேசன் அரிசி எனக்கு முந்தைய ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டு நுகர் பொருள் வாணிபக்கழக கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டதில் அரசுக்கு ஆதாயம் செய்யும் பொருட்டு EC Act பிரிவு 6(A) ன் கீழ் அறிக்கை தயார் செய்து மேற்படி வழக்கின் எதிரிகள் ஆனந்தன், மாரிமுத்து, ஜெயக்குமார், தனுஷ், சேகர், ஜெயராமன், கணேசன் ஆகியோர்கள் மேற்படி அரிசியை கடத்தியதற்குண்டான ஆதாரங்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர் திண்டுக்கல் அவர்களுக்கு மேற்படி 6(A) அறிக்கையினை அனுப்பிவைத்தேன். மேற்படி 6(A) அறிக்கை பக்கம் 1 முதல் 8 வரை உள்ளது **அ.சா.ஆ.11** ஆகும். மேற்படி அறிக்கையின் அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்தி அரிசியை அரசுக்கு ஆதாயமாக்கி நடவடிக்கை மேற்கொள்ளலாம். அதனடிப்படையில் எதிரிகள் மீது அபராதம் விதிக்கவும் EC Act ன் படி மாவட்ட வருவாய் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. குற்ற வழக்கு நடத்தவும் அதிகாரம் உண்டு. இந்த வழக்கு சம்மந்தமாக திண்டுக்கல் மாவட்ட குடிமைப்பொருள் வழங்கல் அலுவலக அலுவலர்கள் இருவர் லஞ்ச ஒழிப்புத் துறையினரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக ல.ஒ.பி. காவல்

துணைகண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த சிவில் சப்ளை வழக்கில் நான் விசாரணை செய்தவகையில் ஆவணங்களை பார்த்த வகையிலும், சாட்சிகளை விசாரணை செய்த வகையிலும், 7 நபர்கள் இவ்வழக்கில் குற்றம் இழைத்ததாக தெரியவந்தது என்றால் சரிதான். இவ்வழக்கில் பகுப்பாய்வு அறிக்கையை நான் பார்வையிட்ட வகையிலும், புலன் விசாரணை செய்த வகையிலும் கைப்பற்றப்பட்ட அரிசி ரேசன் அரிசி என்று உறுதியாக தெரியாது என்றால் சரிதான். அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்படி குற்றம் இழைத்த நபர்கள் மீது தொடர்புடைய குற்றவியல் நடுவர் மன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் தொடர்புடைய ரேசன் அரிசியானது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கிட்டங்கியில் வருவாய்துறை அதிகாரிகளால் ஒப்படைக்கப்பட்ட விபரங்களை நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். சிவில் சப்ளை வழக்குகளை குற்றம் இழைத்தவர்களுக்கு எதிராக வருவாய்துறை மூலமாகவும், நடுவர்மன்றம் மூலமாக குற்றவியல் நடவடிக்கைகளும் எடுக்கலாம் என்றால் சரிதான். குடிமைப் பொருள் அத்தியாவசிய சட்டத்தின் கீழ் 6(A)ன் படியான முடிவெடுக்கக்கூடிய அதிகாரம் அந்தந்த மாவட்ட வருவாய் அலுவலருக்கு மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான்.

27.9.19

Typed down to my dictation, in my Presence and hearing and under my personal dictation and Superintendence, and interpreted to the witnesses in the presence of the accused and admitted by the witness to be correct.

27/9/2019

CHIEF JUDICIAL MAGISTRATE
DINDIGUL.

SPlcc 14/14/
22ரிகிளி டாப்பக்கிளிண் 12